SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:3, Issue:9, Pages:56
APRIL-2024, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்
ஏப்ரல் 2024, விலை ரூ.20/-



திருமலையப்ப ஸ்வாமி
யுகாதி ஆஸ்தானம்
09-04-2024



ஒண்டிமிட்டா
ஸ்ரீகோதண்டராமஸ்வாமி பிரம்மோத்ஸவம்
17-04-2024 முதல் 25-04-2024 வரை

17-04-2024, புதன் கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : சேஷ வாகனம்
18-04-2024, வியாழக்கிழமை
பகல் : வேணுகானாலங்காரம்
இரவு : ஹம்ச வாகனம்
19-04-2024, வெள்ளிக்கிழமை
பகல் : வடபத்ரசாயி அலங்காரம்
இரவு : சிம்ம வாகனம்
20-04-2024, சனிக்கிழமை
பகல் : நவநீத கிருஷ்ணாலங்காரம்
இரவு : ஹனுமத்சேவை
21-04-2024, ஞாயிற்றுக்கிழமை
பகல் : மோஹினி சேவை
இரவு : கருட சேவை
22-04-2024, திங்கட்கிழமை
பகல் : சிவதனுர்பாணாலங்காரம்
இரவு : வரவேற்பு, கல்யாணோத்ஸவம், யானை வாகனம்
23-04-2024, செவ்வாய்க்கிழமை
பகல் : திருத்தேர்
24-04-2024, புதன் கிழமை
பகல் : காளியமர்தனாலங்காரம்
இரவு : குதிரை வாகனம்
25-04-2024, வியாழக்கிழமை
பகல் : சக்கரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்



திருப்பதி
ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
2024 ஏப்ரல் 05 முதல் 13 வரை

05-04-2024, வெள்ளிக்கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்
06-04-2024, சனிக்கிழமை
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்
07-04-2024, ஞாயிற்றுக்கிழமை
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்
08-04-2024, திங்கட்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்
09-04-2024, செவ்வாய்க்கிழமை
பகல் : பல்லக்கில் மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்
10-04-2024, புதன் கிழமை
பகல் : ஹனுமத்வாகனம்
இரவு : யானை வாகனம்
11-04-2024, வியாழக்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்
12-04-2024, வெள்ளிக்கிழமை
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்
13-04-2024, சனிக்கிழமை
பகல் : சக்ரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்



*அசோச்யாநந்வசோசஸ்த்வம்*
*ப்ரஜ்ஞாவாத$_3$ாம்ச்ச ப$_4$ாஷஸே ।*
*க$_3$தாஸூநக$_3$தாஸூம்ச்ச*
*நாநுசோசந்தி பண்டி$_3$தா:॥*

ஸ்ரீபகவான் கூறுகிறார் – நீ துக்கப்படத்தகாத மனிதர்களின் பொருட்டு வருந்துகிறாய். மேலும், பண்டிதர்களைப் போன்று பேசுகிறாய். ஆனால், உயிர் போனவர்களுக்காகவும், உயிர் போகாதவர்களுக்காகவும் பண்டிதர்கள் வருந்துவதில்லை.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–11*



*அண்டர் தம் துயரம் தீர அயோத்தி*
*மாநகரில் வந்து*
*தண்டகாரணியஞ்சென்று சமுத்திர*
*மீதணையைக்கட்டிக்*
*கொண்டு ராவணனை மாட்டக்*
*கோதண்டங்கையில் ஏந்தும்*
*புண்டரீகக் கண்ணன் ராமன் பொன்னடிக்*
*கமலம் போற்றி*

வானவர் துன்பம் போக்க அயோத்தி என்னும் பெருநகரத்தில் வந்து உதித்தவனும், வனவாசம் சென்றவனும், சமுத்திரத்திடையே ஓர் அணையைக் கட்டி இலங்கைச் சென்றவனும், பொல்லா அரக்கன் இராவணனை வதைக்க வில்லைக் கையில் ஏந்தியவனும், தாமரைக் கண்ணனுமான அந்த ஸ்ரீராமன் பொற்பாதங்களைப் போற்றுவோமாக.

*- அருணாசலகவி*





திருமலை திருப்பதி
தேவஸ்தானம்

# "ஸ்ரீவேங்கடேஸ்வரா அன்னப்பிரசாத அறக்கட்டளை"

*திருமலையிலும், திருச்சானூரிலும் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னப்பிரசாதம் வழங்கப்படுவது அறிந்ததே. தற்பொழுது தி.தி.தே. அன்னப்பிரசாத அறக்கட்டளை பக்தர்களுக்கும், நன்கொடை யாளர்களுக்கும் இதற்கு நன்கொடை அளிக்க நல்வாய்ப்பினை நல்குகின்றது. அதுவே,*

## ஒரு நாள் நன்கொடை திட்டம்

| | | |
|---|---|---|
| 1) | காலை சிற்றுண்டி | - 08 இலட்சம் |
| 2) | மதிய உணவு | - 15 இலட்சம் |
| 3) | இரவு உணவு | - 15 இலட்சம் |
| | மொத்தம் | - 38 இலட்சம் |

0877-2263001
0877-2263472

திருமலை திருப்பதி தேவஸ்தான அன்னப்பிரசாத அறக்கட்டளை இத்தொகையை நன்கொடையாளர்களிடமிருந்து பெற விழைகிறது. நன்கொடையாளர் / தனிப்பட்ட நபர் / நிறுவனங்கள் / நிறுமங்கள் / அறக் கட்டளைகள் இணைந்தும் இருக்கலாம்.

இவர்கள் ஒரு நாளைக்கு மொத்தம் ரூ.38 இலட்சமோ/காலை சிற்றுண்டிக்கு ரூ.8 இலட்சமோ/மதிய உணவிற்கு ரூ.15 இலட்சமோ/ இரவு உணவிற்கு ரூ.15 இலட்சமோ அளிக்கலாம்.

தி.தி.தேவஸ்தானம் நன்கொடையாளர்களுக்கு அளிக்கும் வசதிகள் ஒரே விதமாகவே இருக்கும்.

**மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்:**

**துணைச்செயலாட்சித் தலைவர் (நன்கொடையாளர் பிரிவு) எப்.ஏ.சி., தி.தி.தேவஸ்தானம், திருமலை, ஆந்திர மாநிலம்**

மின்னஞ்சல் : cdmc.ttd@tirumala.org
www.tirumala.org என்ற இணையதளத்திலும் விவரங்களைக் காணலாம்.

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்



# ஸப்தகிரி

## சமய மாத இதழ்


ஏப்ரல் 2024

மலர் 03 இதழ் 09



சிறப்பு ஆசிரியர் :
திரு. A.V. தர்மா ரெட்டி, ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா

**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை **www.tirumala.org**யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு **sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


## உள்ளுறை

பக்கம்


யுகங்கள் தோறும் ஸ்ரீராமர் 07

ஆயுர்வேதம் : யுகாதிபச்சடி -திருமதி வி.உஷா, திருப்பதி. 09

திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப்பாசுரம்: இலங்கையைக் காத்த வேங்கடவா! -பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. 10

உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம் -ஸ்ரீமான் உ.வே.டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன் ஸ்வாமி, திருப்பதி. 13

பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் -திரு.எம்.எஸ்.சுகுமார், சென்னை. 15

இராமாயணம் உணர்த்தும் தத்துவம் - முனைவர். ந.மைதிலி, சென்னை. 16

அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: கௌசல்யா எனும் தெய்வத்தாய் - திரு.எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். 19

ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். 23

சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: ஸ்ரீராமனின் கலைமிகு சிற்ப வடிவங்கள் - படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. 25

சித்ரா பௌர்ணமி -முனைவர் திருமதி பா காயத்ரி, அம்பத்தூர். 31

சேர நாட்டில் சக்ரவர்த்தி திருமகன் -திருமதி ராஜலக்ஷ்மி, கேரளா. 33

திருவேங்கடவனை தரிசித்த அன்னமய்யா -திரு.வி.பரந்தாமன், திருப்பதி. 35

108 திவ்யதேச வைபவம் : திருவெஃகா (சின்ன காஞ்சிபுரம்) - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. 37

அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : மாறநேரி நம்பிகள் - ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. 41

ஏகாதசி விரதம் புராண வரலாறுகளுடன்... - திரு.கிருஷ்ண துளசி, சென்னை. 44

ராசிபலன்கள் : ஏப்ரல் 2024 -டாக்டர் எம்.வி. நரநாராயணன்,சேலம். 47

நீதிக்கதை : அதர்மத்திற்கு வெற்றி கிடைக்காது -திரு.பாலாஜிகணேஷ், சிதம்பரம். 48

சித்திரக்கதை : அனைவருக்கும் மோட்சம் 52


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : உபய தேவியருடன் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.
பின்னட்டை : ஸ்ரீகோதண்டராமர், திருமலை.



உங்களுடன்

# தர்மத்தின் தலைவன் இராமன்

ஸ்ரீமந்நாராயணனான மஹாவிஷ்ணு எண்ணற்ற அவதாரங்களை எடுத்திருந்தாலும், அவற்றில் பூர்ண அவதாரங்களாகப் போற்றப்படுபவை இராம, கிருஷ்ண அவதாரம் ஆகும். இவ்விரு அவதாரங்களிலும் தர்மத்தின் வடிவமாகப் போற்றப்படுவது இராம அவதாரமே ஆகும்.

இவ்வுலகினைக் காப்பவர் பரம்பொருளான மஹாவிஷ்ணுவே. இவ்வுலகில் தர்மத்திற்கு அநீதி ஏற்படும்போதெல்லாம் அவதாரம் மேற்கொள்ள வேண்டி வருகிறது. ஒரு லட்சிய மனிதன் தர்மத்தின்படி எவ்வாறு வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பதை உலகிற்குக் காட்ட விரும்பினார். அதற்காக தர்மத்தின் வடிவமாக ஸ்ரீராம அவதாரம் எடுத்தார். ஒரு இல், ஒரு வில், ஒரு சொல் எனும் தர்மத்தின்படி வாழ்ந்தும் காட்டினார். இதனை தியாகராஜர் தம் கீர்த்தனையில் *''ஒகமாடா ஒகபாணமு ஒக பத்னி வரதுடே மனசா''* என்று பாடுகின்றார். இது குறித்தே நம்மாழ்வார் *''கற்பார் ராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ''* என்கிறார்.

வால்மீகி முனிவர் நாரதரிடம் இவ்வுலகில் உண்மையிலேயே நல்லொழுக்கமுள்ளவர், நேர்மையானவர், நற்செயல்களில் கவனமுடையவர், உண்மையை மட்டுமே பேசுபவர், உறுதியானவர், மகிழ்ச்சியுடன் பல நற்பண்புகளைக் கொண்டவர் யார்? என்று வினவுகிறார். அதற்கு நாரதர் ''ஸ்ரீராமபிரானே'' என்று பதிலுரைக்கின்றார். நற்குணங்கள் பொருந்தியவன், தைரியசாலி, நன்றி உடையவன், உண்மையைப் பேசுபவன், நன்னடத்தை உடையவன், பண்டிதன், எல்லா ஜீவராசிகளுக்கும் நன்மையை நினைப்பவன், புத்தி கூர்மை உடையவன், பொறாமையற்றவன், கோபத்தை வென்றவன், ரம்யமுடன் இருப்பவன், தன் வடிவிற்கு ஏற்றபடி நடப்பவன், புகழ் உடையவன், தேவர்களுக்கும் அரிதானவன் எனும்படியான 16 நற்குணங்களையும் தன்னிடத்தே கொண்டு வாழ்ந்தவர் ஸ்ரீராமபிரான்.

காலம், ஜாதி, மதம், புவியியல் வேறுபாடுகள் இன்றி இவ்வுலகில் உள்ளோர் ஒவ்வொருவரும் நற்பாதையில் வாழ்க்கையைத் தொடர வேண்டும் எனும் இலக்கு இருந்தால் அவர்கள் ஸ்ரீராமருடைய வழியினைக் கடைபிடித்தாலே போதும், அவர்களின் வாழ்வு சிறப்புற்றதாகவும், மகிழ்ச்சியோடும் அமையும் என்பதில் ஐயமில்லை.

இராமாயணம் மக்கள் மனதில் இன்றும், இன்னும் பல மில்லியன் ஆண்டுகளுக்குப் பின்பும் தொடர்ந்து வாழும். அதற்குக் காரணம் தர்மமே வடிவமாகக் கொண்டு வாழ்ந்த ஸ்ரீராமன் மற்றும் சீதா தேவியின் பாத்திரமே ஆகும். இராமனுடைய வாழ்க்கையின் தியாகம் பொறுமையைக் கற்று கொடுக்கிறது. ஸ்ரீராமன் என்றும் புன்னகைத் ததும்பும் முகத்தினை உடையவர். மரவுரி தரித்து காட்டிற்கு கிளம்பும் போதும் முகத்தில் எவ்வித வருத்தமுமின்றி மலர்ந்த தாமரை மலரைப் போல புன்னகையுடன் கிளம்பினாராம். இதனை கவிச்சக்கரவர்த்தி கம்பன், *''சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை ஒத்திருக்கும் முகத்தினன்''* என்று குறிப்பிடுகிறார். அதோடு புலன்களை அடக்கி, எக்காரணத்தைக் கொண்டும் தர்ம வாழ்க்கையைக் கைவிடாது வாழவேண்டும் என்பதையும் இராமனின் குணம் நமக்குக் கற்றுக்கொடுக்கிறது.

பெற்றோரின் சொல்லே மந்திரமாகவும், பணிவான மாணவனாகவும், அன்புடைய கணவனாகவும், சிறந்த போர்வீரனாகவும், நல்ல நண்பனாகவும், பாசமுள்ள சகோதரனாகவும், நீதி கொண்ட அரசனாகவும், அனைத்து ஜீவன்களிடமும் அன்பு செலுத்துபவனாகவும் தனது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒருவர் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக இராமச்சந்திர மூர்த்தி வாழ்ந்து காட்டினார்.

இராமன் எவ்விதமான இக்கட்டான சூழ்நிலையிலும் பொறுமையை இழக்காமல், பதற்றமின்றி, முகமலர்ச்சியோடு வாழ்க்கையில் முன்னோக்கிச் சென்றதுபோல் பொறுமையோடும், சிறு புன்னகையோடும் ஸ்ரீராமரின் தர்மத்தின் பாதையில் நாமும் பயணித்து இன்புறுவோமாக.

# யுகங்கள் தோறும் ஸ்ரீராமர்

சனாதன சமய இலக்கியத்தில் ஸ்ரீமத்ராமாயணம் ஆதிகாவியமாக உலகப் புகழ் பெற்றது. அம்மகாகாவியம் பாரதத் திருநாட்டின் பண்பாட்டிற்கு மூலக்காரணமாக விளங்குகிறது. ஸ்ரீமத் ராமாயணத்தை வடமொழியில் வால்மீகி முனிவர் மதுரவாக்காக உலகிற்கு வழங்கினார். அன்றிலிருந்து அம்முனிவர் ஆதிகவியாகவும், அந்த இராமகதை ஆதி காவியமாகவும் எல்லா உலகத்திலும் பல்வேறு வகையில் பரிணமிப்பது பெருஞ்சிறப்பாகும்.

*"யாவத் ஸ்தாஸ்யந்தி கிரிய: சரிதச்ச மஹீதலே*
*தாவத்ராமாயணகதா லோகோஷு ப்ரசலிஷ்யதி"*

என்னும்படி ஸ்ரீமத் ராமாயணக் கதை மலைகள் மண் மீதிருக்கும் வரை, நதிகள் பாயும் வரை அனைத்துலகத்திலும் பரந்து இருக்கும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை ஆகும். அதுவே அக்காவிய வைபோகத்தினை சொல்லாமல் விளங்க வைக்கிறது.



இந்த மகா காவிய நாயகன் புருஷோத்தமனான ஸ்ரீராமச்சந்திரன் அவனது நாம உச்சரணை ஒரு வேடனை மகா கவியாக மாற்றியது. ஆதிகவியாக ஆக்கியது.

அதோடு மட்டுமின்றி புருஷோத்தமனான ஸ்ரீராமரின் பித்ரு வாக்கிய பரிபாலனம். ஒரு இல், ஒரு வில், ஒரு சொல் என்னும் நியம நிஷ்டை, நட்புக்கு இலக்கணம், சிஷ்டரக்ஷணை, பிறன் மனை நோக்கா பேராண்மை, உதாரகுணம்... அங்ஙனே சீதா பிராட்டியின் கற்பின் மேன்மை, பொறுமை, சகிப்புத்தன்மை, தாயன்பு, தசரதனின் புத்ர பாசம், பரதாதிகளின் சகோதர பாசம், லக்ஷ்மணனின் கைங்கர்யஸ்ரீயும், ஸ்ரீராமரின் சேவகனான ஆஞ்சநேயனின் ஸ்வாமி பக்தி பராயணத்வம், சகஜமான உழைப்பும், குறையில்லா பிரம்மச்சரியமும், பக்தர்களின் மீது அளவு கடந்த அன்பு... இங்ஙனே உலகினை உய்விக்க உதவும் நற்குணக்குவியல் இங்கில்லாது வேறெங்கு பரிமளிக்கும். இங்கு கவனிக்க வேண்டிய அம்சம் ஒன்றுள்ளது. இவ்வளவு சிறப்பு குணங்களுடன் ஸ்ரீராமன் உத்தம புருஷனாய் உதாரணமாய் நின்றான். ஆனால் இராவணன்' சகல வித்தைகளிலும் கைத்தேர்ந்து இருந்தாலும், தீரனானாலும், பரம சிவபக்தனானாலும், ஈனமான "பிறன் மனை நோக்கு" என்னும் பலவீனத்தால் அவன் அழிந்தான். ஆகவே அவனோடு கூட இலங்கையும் அழிந்தது. அனேக நற்குணங்கள் கொண்ட ஸ்ரீராமச்சந்திரன் தெய்வமானான். ஸ்ரீமத் ராமாயணம் நித்திய பாராயண நூல் ஆனது.

எனவே ஊரெல்லாம், தெருவெல்லாம் ஸ்ரீராமனுக்கு கோயிலும் கோபுரமும் உருவாயின. அதுமட்டுமின்றி அன்று ஸ்ரீசீதாராமலட்சுமணர்கள் திரிந்த பிரதேசங்கள், திவ்விய திருத்தலங்கள் மக்களிடையே பண்பாட்டோடு பக்தியையும் பெருக்கும் புண்ணியத் திருத்தலங்களாய் இன்றும்

# திருமலையில் வஸந்தோத்ஸவம்



வஸந்த காலமான சித்திரை மாதத்தில் அனைத்து ஆலயங்களிலும் வஸந்த உற்சவம் என்ற சிறப்பு உத்ஸவம் நடைபெறுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இது முக்கியமான உத்ஸவமாகும். ஆலய சம்பிரதாயப்படி வஸந்தோத்ஸவம் மூன்று நாட்கள் நடைபெறுகிறது. திருமலையில் சைத்ர மாத வளர்பிறை திரயோதசி, சதுர்த்தசி, பௌர்ணமி ஆகிய மூன்று நாட்கள் வஸந்தோத்ஸவம் மிகச் சிறப்பாக நடைபெறும். திருக்கோவிலுக்குப் பின்புறம் சுமார் ஐந்து கோடி ரூபாய் செலவில் 2010ஆம் ஆண்டு மிகச்சிறப்பாகக் கட்டி முடிக்கப் பட்ட வசந்தோத்ஸவ மண்டபத்தில் வருடாந்திர வஸந்தோத்ஸவம் கொண்டாடப்பட்டு வருகிறது.

விஜயநகர மாமன்னர் கிருஷ்ணதேவராயரின் மறைவிற்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பேற்ற அவரது இளைய சகோதரரான அச்யுத ராயர் (1529-1542) காலத்திலிருந்தே திருமலையில் வஸந்தோத்ஸவம் நடைபெற்றதற்கான ஆதாரங்கள் உள்ளன. திருவேங்கடவனின் ஆலயத்தில் கணக்காளராகப் பணியாற்றியவரின் புதல்வரான பெரிய சோலை என்பவரால் சக ஆண்டு 1460ல் (கி.பி. 1526) 3000 நற்பணம் கொண்டு வசந்தோத்ஸவம் துவக்கப்பட்டதாக கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

இந்த உற்சவத்தின் முன்னர் வாஸ்து சாந்தி, அங்குரார்ப்பணம், புண்யாஹவசனம் போன்ற சடங்குகள் நடை பெறுகின்றன. வஸந்தோத்ஸவ முதல் நாளன்று காலை 8 மணிக்கு ஸ்ரீதேவி, பூதேவியுடன் திருமலையப்ப ஸ்வாமி மாட வீதிகளில் திருவீதி உலா வந்து ஆலயத்திற்குப் பின்புறம் அமைந்துள்ள வஸந்த மண்டபத்திற்கு எழுந்தருள அங்கு பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை ஸ்நபன திருமஞ்சனம், நிவேதனம், ஆஸ்தான சேவை நடக்கிறது. இரண்டாவது நாள் திருமலையப்ப ஸ்வாமி தங்கரதத்தில் மாடவீதிகளில் திருவீதி உலா வந்து, வஸந்த மண்டபத்தை அடைகிறார். மூன்றாம் நாள் ஸ்ரீதேவி பூதேவி சமேதராக திருமலையப்ப ஸ்வாமி, ஸ்ரீசீதா லட்சுமணர், ஆஞ்சநேயர் சமேத ஸ்ரீஇராமச்சந்திர மூர்த்தி, ருக்மணி சமேதராக ஸ்ரீநவநீதகிருஷ்ண ஸ்வாமி ஆகியோர் எழுந்தருள்கின்றனர். இந்த மூன்று நாட்களும் வஸந்த மண்டபத்தில் சிறப்பு ஸ்நபன திருமஞ்சனம், தீபாராதனைக்குப் பின்னர் உத்சவ மூர்த்திகள் மாட வீதிகள் வழியாக மீண்டும் ஆலயத்திற்குள் எழுந்தருளுகின்றனர்.

விளங்கி வருகின்றன. மேலும் அன்று முதல் ஸ்ரீராமனின் கதை காவியமாக யக்ஷகானங்களாக, நாடகங்களாக.... இங்ஙனே அனேக வகையில் வெளிவந்துக் கொண்டேயிருக்கின்றன. ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி அவதரித்த "ஸ்ரீராமநவமி" தினத்தை கோலாகலமாக நாடு முழுவதும் கொண்டாடி வருகின்றனர். சில பேர் "உகாதி" பண்டிகை முதல் ஸ்ரீராமநவமி வரை "வசந்த நவராத்திரிகள்" எனக் கொண்டாடினால் மற்றும் சிலர் "ஸ்ரீராமநவமி" முதல் ஸ்ரீராமநவராத்திரிகள் என வைபவமாகப் பண்ணுவர்.

ஆகவே மக்களிடையே தார்மீக (அற) விழிப்புணர்வைத் தூண்டுகின்ற "ஸ்ரீமத்ராமாயணத்தில்" உள்ள ஒரு எழுத்தானாலும் சரி அது மஹாபாதகங்களைப் போக்கும் என்பது உலகம் அறிந்த உண்மையாகும்.





# யுகாதி பச்சடி

காலத்தைக் கணிக்கும் நன்னாள் தெலுங்கு வருடப் பிறப்பான யுகாதி. யுகாதி என்றால் நினைக்கும்போதே ஆறு சுவைகளான இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, துவர்ப்பு, கசப்பு ஆகிய சுவைகள் நிறைந்த யுகாதி பச்சடி (நிம்பகுசும பக்ஷணம், அசோக களிகா ப்ராசம்) தான் நினைவுக்கு வரும். இதை உட்கொண்டால் நம் உடலில் ஏற்படும் வாதம், பித்தம், கபம் போன்ற உபாதைகள் நீங்கி வருடம் முழுவதும் நாம் ஆரோக்கியமாக வழலாம்.

*தத்ராத்யா மாருதம் க்னந்தி த்ரயஸ்திகாதய: கபம்*
*கஷாயதிக்த மதுரா: பித்தமன்யேது குர்யதே*

அஷ்டாங்க ஹ்ருதய கர்த்த வாக்படாச்சார்யர் என்பவர், “ஆறு சுவைகள் நிறைந்தவைகளால் வாதம், பித்தம், கபம் ஆகியவற்றால் ஏற்படும் நோய்கள் நீங்கும். ஆண்டுதோறும் நமக்கு ஏற்படும் நல்லது–கெட்டது, வெற்றி–தோல்வி ஆகிய பல இன்னல்களை நாம் எளிமையாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை உணர்த்துவதே இந்த யுகாதி பண்டிகை” என்கிறார்.

## சாம்பிரதாயப்படி யுகாதி பச்சடி தயாரித்தல்

ஒரு மண்பாத்திரத்தில் இளவேப்பம்பூ 1 பங்கு, மாம்பிஞ்சுகள் 2 பங்கு, மிளகுப் பொடி 3 பங்கு, புளிக்கரைசல் (முற்காலத்தில் நெல்லிக்காய்/எலுமிச்சை ரசம் உபயோகிப்பர்) 4 பங்கு, உப்பு 4 பங்கு, வெல்லத்துருவல் 6 பங்கு இட்டு தகுந்தளவு நீர் ஊற்றி இந்தப் பச்சடியைச் செய்வர்.இவ்வாறு முறைப்படி தயாரித்த சட்னியை வெறும் வயிற்றில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

*சதாயு வஜ்ர தேஹாய சர்வ சம்வத்கராயச*
*சர்வாரிஷ்ட விநாசாய நிம்பகம் தள பக்ஷணம்*

என்ற சுலோகத்தை சொல்லிக்கொண்டே இப்பச்சடியை உட்கொள்ள வேண்டும்.

அரிஷ்ட வர்க்கங்களாக சொல்லும் காமம், க்ரோதம், லோபம், மோகம் போன்றவற்றின் பிடியில் இருந்து வெற்றி கொள்ளவும், நோய் எதிர்ப்பு சக்தி கிட்டவும் இப்பச்சடியைச் சைத்ர மாதம் பிரதமையில் இருந்து நவமி வரை உட்கொள்வர்.

வேம்பு உடலிலுள்ள கிருமிகளைக் கொன்று, இரத்தம் சுத்தி செய்து சரும வியாதிகளை குணமாக்கும். மாம்பிஞ்சு செரிமானத்தை அதிகரிக்கிறது. மிளகு சளி, கபம் போன்றவற்றை குறைத்து, ஆஸ்துமா, இருமல், சுவாசக் கோளாறுகள் நீக்கும். புளிக்கரைசல் நம் குடல்களை சுத்திகரித்து, நல்ல பசியைத் தூண்டும். உப்பு உணவுக்குச் சுவையை அளிப்பதுடன் சக்தியையும் அளிக்கிறது. செரிமானக் கோளாறுகள் நீங்கும். வெல்லம் இரத்தக் குறைவு ஏற்படாமல் தடுத்து நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கிறது.

நவீன காலத்தில் ஒரு பாத்திரத்தில் 1 தேக்கரண்டி வேப்பம்பூ, தேங்காய் துருவல், நறுக்கிய வாழைப் பழம், நறுக்கிய பச்சை மிளகாய், ஒரு கப் வெல்லம் துருவல், மாங்காய்த் துண்டுகள், சிறுகரும்புத் துண்டுகள், சிறிது உப்பு, தகுந்தளவு நீர் சேர்த்து இந்தப் பச்சடியைத் தயார் செய்கின்றனர்.

பகவானின் பிரசாதமாக இயற்கையில் கிடைக்கும் பலவிதமான உணவுப் பொருட்கள் நம் ஆரோக்கியத்திற்கு பயனுள்ளதாக எவ்வாறு உபயோகிப்பது என்பதை உணர்த்துவதே இந்த யுகாதி பண்டிகை ஆகும்.

தெலுங்கு மூலம் :
டாக்டர். சி.மதுசூதன சர்மா,
90007 61390
தமிழாக்கம் : திருமதி வி.உஷா

# இலங்கையைக் காத்த வேங்கடவா!

## எனைக்காக்க விரைந்து வா!!

சித்திரை மாதம் என்றாலே இராமனும் இராம நாமமும் தான் நினைவுக்கு வரும். காரணம் சைத்ர மாதம் எனப்படும் சித்திரை மாதத்தில் அவதரித்தவன் இராமன்.

ஆழ்வார்கள் இராமனைப் போற்றிக் கொண்டாடு கிறார்கள். திருமலையப்பனிடம் சென்று பாடுகின்ற போது திருமங்கை ஆழ்வாருக்கு இராமாவதாரம், நினைவுக்கு வர இப்படி ஆரம்பிக்கிறார்.

*கண்ணார்க் கடல் சூழ் இலங்கைக்கிறைவன்தன்*
*திண்ணாகம்பிளக்கச் சரம் செலவுய்த்தாய்*
*விண்ணோர்த்தொழும் வேங்கட மாமலைமேய*
*அண்ணா! அடியேன் இடரைக் களையாயே.*

ஒருவன் கற்றவன் என்றால் இராமனைக் கற்க வேண்டும் என்கிறார் நம்மாழ்வார்.

*“கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ?*
*புற்பா முதலாப் புல் எறும்பு ஆதி ஒன்று இன்றியே*
*நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்*
*நற்பாலுக்கு உய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே”*

இப்பாசுரத்தில் இராமபிரானுடைய அதி விசேஷமான தன்மையை அருளிச் செய்கிறார். தசரதச் சக்ரவர்த்தியின் கட்டளையின்படி இராமபிரானைத் தேரிலேற்றிக் கொண்டு போய் கங்கைக்கரையில் விட்டுத் திரும்பிய சுமந்த்ரன் சக்ரவர்த்தியிடம் சொல்லுகிறான். “மஹா ராஜரே! உம்முடைய திருக்குமாரன் நாட்டை விட்டுக் காட்டுக்குப் புறப்பட்டுச் செல்லுகி றானே என்கிற துயரத்தினால் மரங்கள் எல்லாம் வாடி உலர்ந்து போயின. நதிகள், குளங்கள், குட்டைகளெல்லாம் கரையருகிலும் அடி வைக்க வொண்ணாதபடி கொதிப்படைந் தன. சிறிய தோட்டங் கள், பெரிய தோட்டங்கள் என்கிற வித்தியாச மின்றி பொழில்களெல்லாம் இலையுலர்ந்து அழகழியப் பெற்றன” என்கிறான்.

இப்படி அசேதந வஸ்துக்களையுங்கூட விசாரப்படுத்திக் கொண்டே காட்டிற்கு எழுந்தருளினவன் பதினாலாண்டு கடந்த பிறகு மீண்டும் திருவயோத்திக்கு எழுந்தருளு கையில் எல்லாம் செழிப்படைந்தன.



- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963

தன்னுடைய விச்லேஷத்தில் (பிரிவில் வாடி உலர்ந்தும், ஸம்ச்லேஷத்தில் (சேர்த்தியில் செழித்து ஓங்கியும் நின்றன. அசேதனங் கள் என்றால் அவன் குணப்பெருமையை என்னென்று சொல்லுவது! கம்பன் இராமனை, "நடத்தை யில் நின்றுயர் நாயகன்" என்று அவனுடைய குண விசேஷங்களைப் போற்று கின்றார். சிலருக்குச் சில குணங்கள் இருக்கும்; இருக் காது; சகல கல்யாண குணங்களும் ஒருவனிடமே அடைந்திருக்குமா என்றால் அது சாத்தியமில்லாத விஷயம் என்போம். அதனால்தான் "கோ குணவன்?" என்கிற வால்மீகியின் கேள்விக்கு சகல கல்யாண குணங்களும் பொருந்தியவன் ஸ்ரீராமனே என்று நாரத பகவான் கூறுகின்றார்.

*''க நு அஸ்மின் ஸாம்ப்ரதம் லோகே குணவன்*
*க ச வீர்யவான்*
*தர்மஜ்ஞாஹ் ச க்ருதஜ்ஞா ச சத்ய வாக்யோ*
*த்ருத வ்ரத''*

அந்த ஸ்ரீராமன் யார் என்று சொன்னால் திருவேங்கடத்தில் உறைகின்ற திருவேங்கடவன் என்று துவங்கி ஆழ்வார் பாடுகின்றார்.

**இலங்கைப்பதிக்கு அன்றிறையாய, அரக்கர்**
**குலம்கெட்டவர் மாளக் கொடிப்புள் திரித்தாய்**
**விலங்கல் குடுமித் திருவேங்கடம் மேய**
**அலங்கல் துளப முடியாய்! அருளாயே!**

பொருள் பார்ப்போம். அன்று – முற்காலத்தில், இலங்கை பதிக்கு – லங்காபுரிக்கு, இறை ஆய – அரசர்களாயிருந்த, அரக்கரவர் – (மாலி முதலிய) ராக்ஷஸர்கள்; குலம் கெட்டு மாள – கும்பலோடே சிதறியோடி முடியும் படியாக; கொடி – (தனக்கு) கொடியான; புள் – பெரிய திருவடியை (கருடனை); திரித்தாய் – ஸஞ்சரிப்பித்தவனே! விலங்கல் குடுமி – (மேலே ஸஞ்சரிக்கிற சந்திர ஸூர்யர்கள்) விலங்கிப் போக வேண்டும் படியான (உயர்த்தி பொருந்திய) சிகரத்தையுடைய; திருவேங்கடம் – திருமலையிலே, மேய–மேவியிருப்பவனாய்; துளபம் – திருத்துழாயினாலாகிய; அலங்கல் – மாலையை; திருமுடியிலே அணிந்துள்ளவனே!; அருளாய் – (அடியேன் மீது) க்ருபை பண்ணியருள வேணும்.

இலங்கையிலே இராவணன் என்ற கொடியவன் ஆண்டான். அவனை அழிப்பதற்காக பகவான் இராம னாக அவதரித்தார் என்பது வரை தெரியும். அப்படி யானால் இராவணனுக்கு முன்னால் இலங்கையிலே அரக்கர்கள் இல்லையா? என்ற கேள்வி வருகிறது அல்லவா. இந்தக் கேள்விக்கு விடையாகத்தான் திருமங்கையாழ்வார் இந்தத் திருவேங்கடப் பாசுரத் தில் அற்புதமான செய்தியைச் சொல்லுகின்றார்.

## இராமரை துதிக்கும் தியாகய்யா

**தியாகராஜர் ஸ்ரீராமபிரானிடத்தில் அளப்பரிய பக்தியைக் கொண்டிருந்தார். "சாதிஞ்செனே" எனும் கீர்த்தனையில் இராமபிரானிடம் "உம் பாதங்களைச் சரணடையும் வரத்தையும், இன்பத்துன்பங் களை சமமாக ஏற்கும் பக்குவத்தையும் அளித்திடும்படி வேண்டு கிறார். "கநகநருசிரா" எனும் கீர்த்தனையில் இராம நாமமே இனிமையானது, அதை தினமும் துதிக்கும் வரத்தினை அருளும்படி வேண்டுகிறார்.**



இலங்கைக்கும் அங்கிருந்தபடி ஏனைய உலகுக்கும் ஆபத்தை விளைவிக்கும் அரக்கர் கூட்டம் இராவணனுக்கு முன்னாலும் இருந்தது. அவர்கள் கொட்டத்தை அடக்க பகவான் கருட வாகனத்தின் மீது ஏறி அரக்கர் குலத்தைச் சிதறடித் தார். ஆயினும் புற்று இருக்கும் இடத்தை பாம்புகள் சென்று அடைவது போல இலங்கையில் அடுத்த டுத்து இராவணாதிகள் போன்ற அரக்கர்கள் இருந்த னர் என்கிறது இந்தப் பாசுரம்.

இராவணனுக்கு முன்னால் இலங்கையில் இருந்த அரக்கர்கள் பற்றிய செய்திகளை உத்தர காண்டம் தெரிவிக்கின்றது. ஹேதி மற்றும் பிரஹேதி என்ற இரண்டு சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் மகாபலியின் பிரிக்க முடியாத தோழர்கள்.

பிரஹேதி திருமணமாகாதவர். ஹேதி காலாவின் சகோதரியான பாயாவை மணந்து வித்யுத்கேசா என்ற மகனைப் பெற்றார். வித்யுத் கேசா சந்தியாவின் மகள் சாலகடங்காவை மணந்து சுகேச சுகேசா என்ற மகனைப் பெற்றான். மணி மையா என்ற கிராமணியின் மகள் தேவவதியை மணந்தான். தேவவதிக்கு மாலி, சுமாலி, மால்யவன் என்று மூன்று மகன்கள் பிறந்தனர்.

மூன்று சகோதரர்களும், இளம் வயதிலேயே பெரும் வலிமையைப் பெற முடிவு செய்து, தவம் செய்யத் தொடங்கினர். அவர்களின் தவம் மிகவும் கடுமையானதாக மாறியபோது பிரம்மா அவர்கள் முன் நேரில் தோன்றி அவர்களுக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். அவர்கள், "நாம் வெல்ல முடியாதவர்களாக இருக்க வேண்டும், எதிரிகளை அழிப்பவர்களாக இருக்க வேண்டும், நீண்ட ஆயுளுடன் இருக்க வேண்டும்" என்று கேட்க, பிரம்மா கேட்ட வரத்தை வழங்கினார்.

வரம் கிடைத்ததும் அவர்கள் விஸ்வகர்மாவிடம் சென்று தங்களுக்கு வசிப்பிடத்தை அமைத்துத் தரும்படி கேட்டார்கள். விஸ்வகர்மா பயந்து, அவர்கள் வாழ ஒரு அழகான இடத்தை பரிந்துரைத்தார். அதுதான் இலங்கை, "அசுரர்களாகிய நீங்கள் அங்கே தங்கலாம். நீங்கள் புகழும் பெறுவீர்கள். இலங்கையில் வாழ்ந்தால் யாராலும் வெல்ல முடியாது" என்றார்.

மகிழ்ச்சியடைந்த அரக்கர்கள் இலங்கைக்குச் சென்றனர். அவர்கள் நர்மதை என்ற கந்தர்வப் பெண்ணின் மகள்களை மணந்தனர். மாலி வசுதாவை மணந்தார். சுமாலி கேதுமதியையும்,மால்யவன் சுந்தரியையும் மணந்தனர். மாலி தனது மனைவி வசுதாவிற்கு அனிலா, அனலா, ஹர மற்றும் சம்பாதி என்ற நான்கு மகன்களைப் பெற்றெடுத்தார். சுமாலி தனது மனைவி கேதுமதியிடமிருந்து பிரஹஸ்தா, அகம்பனா, விகடன், காலகமுகன், தூம்ராக்ஷா, தண்டா, சுபர்ஷ்வா, சஷ்ராதா, பிரக்வதா, போதா என்ற பத்து மகன்களைப் பெற்றான். மூன்று சகோதரர்கள் மாலியின் தலைமையில் தேவ லோகத்தைத் தாக்கினர். ஒரு பெரிய சண்டை ஏற்பட்டது மற்றும் மாலி மகாவிஷ்ணுவின் சக்கர ஆயுதத்தின் மூலம் இறந்தான் (உத்தர ராமாயணம்).

இச்செய்தியைத்தான், இலங்கைப்பதிக்கு அன்றிறையாய, அரக்கர் குலம் கெட்டவர் மாளக் கொடிப்புள் திரித்தாய்! என்று முதல் இரண்டு வரிகளில் சொல்லிய திருமங்கை ஆழ்வார் அடுத்த இரண்டு வரிகளில் இந்தக் காரியத்தைச் செய்தது வேங்கடவன். அவன் எனக்கும் அருள்வான் என்கிறார்.

அலங்கல் துளப முடியாய் அருளாய் என்ற வரிக்கு ஆர்த்தர்களை ரக்ஷிப்பதற்கென்றே தனி மாலையிட்டிருக்கிற உனக்கு என்னுடைய விரோதிகளைப் போக்குகை ஒரு பெரிய காரியமன்று. அருள் செய்ய வேண்டும் என்று பிரார்த்திக்கிறார்.

இதில் "விலங்கல் குடுமித் திருவேங்கடம் மேய, அலங்கல் துளப முடியாய்" என்பது ரசிக்கத்தக்க தொடர். திருமலை என்ற குடுமியில் உச்சியில் பகவான் இருக்கிறான். அவன் குடுமியில் துளப மாலை இருக்கிறது. பகவானோடு சம்பந்தம் பெற்ற துளசி மஹிமையும் இந்தப் பாசுரத்தில் தெரிகிறது அல்லவா...

*பாசுரம் அறிவோம்...*

## ஸப்தகிரி பிப்ரவரி 2024 விடைகள்

1. சூரிய பகவான்.
2. இரத சப்தமி.
3. தொண்டரடிப்பொடி ஆழ்வார்.
4. சரஸ்வதி தேவி.
5. கடோத்கஜன்.
6. குலசேகர ஆழ்வார்.
7. அஞ்சனா தேவி.
8. பீஷ்மர்.
9. திருமங்கையாழ்வார்.
10. விசுவாமித்திரர்.
11. சாரஸ்ரீகர விமானம்.
12. குலசேகர ஆழ்வார்.
13. திருக்கச்சி நம்பிகள்.
14. ஆலமகி. விஜயா
15. கம்பர்.



## போட்டி எண். 19

வினாடி வினா

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி க.ரம்யா,
   பொன் அண்ணாமலை நகர்,
   விழுப்புரம் மாவட்டம்.
2. செல்வன் ஆர்.தருண்ராம்
   மேட்டுபிள்ளையார்கோயில் தெரு,
   சேலம் மாவட்டம்.
3. செல்வி லாவண்யா
   ஆதம்பாக்கம்,
   சென்னை.



# உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம் - ஓர் அறிமுகம்



**ஸ்ரீமான் உ.வே. டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன் ஸ்வாமி, திருப்பதி, 9985599669**

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் கோயில், திருமலை, பெருமாள் கோயில் (காஞ்சிபுரம்) என மூன்று முதன்மையாகக் கருதப்படுகிறது. இதில் முதல் இரண்டு திவ்ய தேசங்களைப் பற்றிக் கூறப்படுகிறது. இந்த இரண்டு திவ்ய தேசங்களும் ஸ்வயம், வ்யக்த க்ஷேத்ரங்களாகும். பதினோரு சுலோகங்களைக் கொண்ட உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம் இவ்விரண்டு திவ்ய தேசங்களைப் பற்றியதே. இந்த ஸ்தோத்ரம் அந்தாதித்தொடையில் அமைந்துள்ளது. இதற்கு வடமொழியில் பேருரை (வியாக்யானம்) எழுந்துள்ளது. திருவேங்கடமுடையானின் வாத்ஸல்யம் அளவற்றதோடு பிராட்டியினுடைய கருணையும் சேர்ந்து அந்த வாத்ஸல்ய குணம் மேலோங்கி ஒளி விடுவதனால் 'உஜ்ஜ்வல' என்னும் அடைமொழியோடு இது விளங்குகிறது. சுருக்கமாக அனந்தாழ்வானின் வ்ருத்தாந்தம் இயம்பப்படுகிறது.

இந்த ஸ்தோத்ரத்தை இயற்றியவர் மஹா வித்வான் புரிசை ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமி ஆவார். இவர் 190க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றி உள்ளார். இவர் திருமலையிலேயே கைங்கர்யங்களைச் செய்து கொண்டு திருப்பதியை நித்ய வாசமாகக் கொண்டிருந்தார். இவர் ஓரியண்டல் கல்லூரி ஏற்படுத்தி அதில் முதல்வராயிருந்தார். ப்ரஸித்தராயிருந்த ஜகத்குரு ப்ரதிவாதி பயங்கரம் காதி அனந்தாசார்ய ஸ்வாமி, கோழியாலம் ஸ்வாமி போன்ற மஹாவித்வான்கள் இவரிடம் பல சாஸ்த்ர நூல்களைக் கற்றவர்கள்.

இந்த நூலின் ஆசிரியர் இந்த நூலினை 11 சுலோகங்களாக வடிவமைத்துள்ளார். முதல் சுலோகமான "ரங்கே துங்கே" என்பதில் ***''விண்ணவர்கோன் விரையார் பொழில் வேங்கடவன், நிமலன் நீதிவானவன் நீள் மதிளரங்கத் தம்மான்''*** (அமலனாதிபிரான்–1) என்று அர்ச்சாவதார ஒற்றுமை காணப்படுகிறது.

2ஆம் சுலோகமான "தாம் சிந்தாம்" என்பதில் ஸ்ரீரங்கநாதனுக்கும், ஸ்ரீநிவாசனுக்கும் ஒற்றுமை பேசப்படுகிறது. மூன்றாவதாக "ஜ்வாலா" என்னும் சுலோகத்தால், ஸ்ரீரங்கத்தில் அவனுடைய பக்தர்களை நினைத்துக் கொண்டு, சங்கு சக்கரங்களைத் தரித்துக்கொண்டு திருவேங்கட மலையில் ஸ்ரீநிவாசனாக நின்று கொண்டு அருள் புரிவதைக் காண முடிகிறது. அருள் புரிவதில் நல்லவர்கள் கெட்டவர்கள் என்ற வேறுபாடில்லாது இன்னருள் புரிகின்றானாம்.

"அந்த:காந்த:" என்னும் நான்காம் சுலோகத்தில் எம்பெருமானின் கண்கள் கருணை ரஸமான நீராலே நிறைந்த தடாகமாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. எம்பெருமானின் தாமரைக் கண்கள் தாபத்தைப் போக்கியருளுகின்றதாம்.

"அப்ஜேந" என்னும் ஐந்தாம் சுலோகத்தில் "பத்ம கோச ப்ரதீகாசம்" என்னும் சுருதி மூலமாக ஜீவாத் மாக்களுடைய இதயத்தில் எம்பெருமான் ப்ரகாசிப்ப தாகவும், பரமாத்மா தினமும் அக்னிபோல் ப்ரகாசிப்ப தால் ஸம்ஸார நோயால் அவதிப்படுகிற தான் (அனந்தாழ்வார்) அந்த தெய்வீக அக்னியைத் தஞ்சமடைவதாக ஆசிரியர் கூற்று காணப்படுகிறது.

ஆறாம் சுலோகமான "ஜ்வலித" என்னுமதால் எம்பெருமானின் திருமேனி பரபாக சோபையோடு ஒளிர்வதாகவும், தனக்கு ஸுகத்தை அளிக்க வேண்டு மென்பதையும் உணர முடிகிறது. பகவானுடைய நிர்ஹேதுக க்ருபையே ரக்ஷகம் என்பது ஸாரார்த்த மாகத் தெரிவிக்கப்படுகிறது.

"நகதரா" என்னும் சுலோகத்தால் (7) அனந்தாழ்வான் தம்முடைய ஆசாரியனால், நம்மாழ்வார் பாரித்த கைங்கர்யத்தை திருவேங்கடவ னுக்குச் செய்ததைப் பேசப்படுகிறது. எட்டாம் சுலோகமான "கதபயே" என்னுமதில் பத்மாவதித் தாயார் தன்னை "அப்பா" என்றழைக்கப் பட்டமையால் திருவேங்கடமுடையானுக்கு மாமனார் என்ற பெருமையைப் பேசப்படுகிறது.

"மமதயா" என்னும் ஒன்பதாம் சுலோகத்தில் சத்ருக்களை அழிப்பதற்கு எந்தவித களைப்பும் அடைவதில்லை என்பதையும், தன்னுடைய பிறப்புக்குக் களைப்பை அடைந்தது என்பதையும் அனந்தாழ்வான் சொல்வதையும் கூற முடிகிறது.

பத்தாம் சுலோகமான "கடிதபா" என்னுமதில் அநிஷ்ட நிவ்ருத்தி இஷ்டப்ராப்தியின் மூலமாக ரக்ஷணத்தை முக்ய அம்சமாகக் காணப்படுகிறது. இந்த ஸ்தோத்தரத்தின் பெயர்க் காரணமும் தெரிவிக்கப்படுகிறது.

இறுதியான பதினொன்றாம் சுலோகமான உஜ்ஜ்வல வேங்கட நாத ஸ்தோத்ரத்தால் நல்லவர் களுடைய மனதிற்கு அமுதம் போன்றதை இயம்பப் படுகிறது. மேலும், இந்த ஸ்தோத்ரத்தைப் படிப்போர் அழியாத செல்வத்தைப் பெறுவர்கள் என்ற பலச்ருதி (பயன்)யோடு தலைக்கட்டப்படுகிறது.

(மஹாவித்வான் ஸ்ரீமான் உ.வே.புரிசை ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமியின் 180வது திருநட்சத்தி ரத்தை முன்னிட்டு இக்கட்டுரை எழுதப்பட்டது.)

**ஸ்ரீகோதண்ட ராமஸ்வாமி, திருமலை**



**திருமலை ஆனந்த நிலையத்தில் கண்டா(மணி) மண்டபம், ஸ்நபன மண்டபத்திற்கு அடுத்து உள்ள மண்டபம் "ராமுலவாரி மேட" (ஸ்ரீராமர் மேடை). சீதா ராம லக்ஷ்மண உற்சவ மூர்த்திகள் இங்கு வைத்து பூஜித்து வந்ததால் இந்த மேடைக்கு ஸ்ரீராமர் மேடை எனப் பெயர் ஏற்பட்டது. சீதையைத் தேடி இராமர் வேங்கடாத்ரிக்கு வந்ததின் நினைவாக நிறுவிய இந்த உற்சவ மூர்த்திகள் தற்பொழுது கர்ப்பாலயத்தில் தரிசனம் அளிக்கின்றனர். சில காலம் இம்மேடையின் இருபுறமும் ஸ்ரீராமர் மற்றும் திருவேங்கடவனின் பரிவார தேவதைகள் கொலுவீற்றிருந்தனர். இங்கு ஒவ்வொரு மாதமும் புனர்பூசம் திருநட்சத்திரத்தில் அபிஷேகம், திருவீதி உலா மற்றும் சஹஸ்ர தீபலங்கார சேவை நடைபெறுகிறது. ஸ்ரீராமநவமி அன்று ஆஸ்தானம் நடை பெறும். மேலும், வருடாந்திர தெப்போத்ஸவத்தின் போது முதல் நாள் ஸ்ரீராமர் உலா வருவது குறிப்பிடத்தக்கது.**



# பதஞ்சலியின் யோக சூத்திரங்கள்

- திரு.எம்.எஸ்.சுகுமார்,சென்னை,
8838252312.

*சென்றஇதழின் தொடர்ச்சி...*

**சூத்திரம் 43 :** *''ஸ்ம்ருதி பரிசுத்தௌ ஸ்வரூபசூன்யேவார்த்தி மாத்நிர்பாஸா நிர்விதர்கா:''*

ஆகமம், அனுமானம், ஞானம் ஆகியவை தோன்றுவதற்கு அறிமுகமான சொல் முக்கியத் துவம் இல்லாமல் போகும் பட்சத்தில், மறந்த விஷயத்தை பிடிக்கும் தன்மையுடன் இருக்கும் ஞானத்தையும் விட்டு, சித்தமானது தியானத்தில் பிடிபடும் பொருளின் அர்த்தத்தை மட்டும் உணரும்போது "நிர்விதர்க சமாபத்தி" ஏற்படுகிறது.

**சூத்திரம் 44 :** *''ஏதயைவ ஸவிசாரா நிர்விசரா ஸுக்ஷ்மவிஷயா வ்யாக்யாதா:''*

இவ்வாறு சவிதர்க, நிர்விதர்க சமா பத்திகளை விவரிக்கப்பட்ட பின் சவிசார, நிர்விசார சமாபத்தி களையும் சூட்சும விஷயமாக வியாக்கியானம் செய்வதை அறிந்து கொள்ள வேண்டும்.

**சூத்திரம் 45 :** *''சூக்ஷ்ம விஷயத்வம் சாலிங்கபர்யவஸானம்:''*

சவிசார நிர்விசார சமாபத்திகளில் தியானத்தில் வரும் சூட்சும விஷயம் அணு அளவிலும் விடாமல் தொடர்ந்து பிரகிருதி வரை (சிருஷ்டி சக்தி வரை) முடிவடைகிறது. அதாவது அனைத்து தியான விஷயங்களும், சூட்சும விஷயங்களும் சிருஷ்டிக் குள் அடங்கி விடுகின்றன.

**சூத்திரம் 46 :** *"தா ஏவ ஸபீஜ: ஸமாதி:"*

சவிதர்க, நிர்விதர்க சமாபத்திகளில் ஸ்தூல விஷயங்கள் தியானத்தில் பிடிபடும் பொருட்களாக இருப்பவை. இவற்றை சார்ந்தே இந்த சமாபத்தி களில் தியானம் செய்யப்படுகிறது. சவிசார, நிர்விசார சமாபத்திகளில் சூட்சும விஷயங்கள் பிடிபடும் பொருள்களாக இருக்கின்றன. நான்கு சமாபத்திகளும் "ஸபீஜ சமாதிகள்" ஆகின்றன.

**சூத்திரம் 47 :** *''நிர்விசார வைசாரத்யே அத்யாத்ம்பரஸாத:'*

நிர்விசார சமாதியில் தியானம் செய்து பக்குவநிலை அடைந்த பின் அறிவு மிகவும் தெளிவு பெற்று விடுகிறது. சுத்தமான நிலைபாடு என்ற "வைசாரத்யம்" பெறும் சமயம் புத்தியில் ஆத்மீக உணர்வு உணரப்படுவதையே "அத்யாத்ம" என அழைக்கிறார்கள்.

**சூத்திரம் 48 :** *"ரிதம்பரா தத்ர ப்ரக்ஞா:"*

"ரிதம்பரா" என்ற அறிவு, சத்தியத்தையும், தூய்மையையும் பெற்று "அவித்தை" என்ற கிலேசம் இல்லாமல் போகும்போது அத்யாத்ம பிரகாசத்தினால் பேரறிவு உண்டாகி "ஞானம்" உதயமாவதே ரிதம்பரா ஞானம்.

**சூத்திரம் 49 :** *"ச்ருதானுமான ப்ரக்ஞாப்யாமன்ய விஷயா விசேஷார் தத்வாத்:"*

வேத சாஸ்திரங்கள் படித்ததினால் வந்த ஞானமும், பெரியோர்கள் சொல்லும் விஷயங் களில் வந்த ஞானமும், அனுமான பிரமாணத்தால் சாதாரண அறிவுக்கு எட்டும் ஞானமும் முழுமை பெறாத ஞானங்கள். உண்மை சொரூபத்தை "ரிதம்பரா ப்ரக்ஞா" என்கிற பேரறிவால் உணர்ந்து கொள்வதே மிகச் சிறந்ததாகும்.

தொடரும்....

- முனைவர் ந.மைதிலி, சென்னை, 9884347886

# இராமாயணம் உணர்த்தும் தத்துவம்


அறிவொளியை எவ்வாறு அடைவது என்பதை ஆன்மீக நெறியில் விளக்குவது உண்மையின் அன்பு மற்றும் நல்லொழுக்க வாழ்வைக் கொண்ட ஆழமான ஞானம் தத்துவம் ஆகும். வாழ்க்கையை ஒழுங்குபட நடத்துவதன் மூலம் ஒருவரின் நல் வாழ்வை மேம்படுத்தும் நோக்கத்தைக் கொண்டு உள்ளது தத்துவம். ஆக, அறிவின் மீது கொண்டிருக்கும் பற்றினைக் காட்டுகிறது. தத்துவம் என்பது சிறப்பு. உலகின் முழுமைப் பொருளை அறிந்து வாழ்க்கைக்கு வழிகாட்டும் அளவில் தத்துவம் முக்கியத்துவம் பெறுகிறது.

## இராமாயணத் தத்துவம்

பிரக்ஞை என்ற பதம் உணர்வு, மனம், நினைவு ஆகியவை தெளிவாக இருக்கும் நிலை என்று சொல்லப்படுகிறது. நம் உள் ஒளியை நாமே அறியும் ஆற்றலாகிய விழிப்புணர்வு பிரக்ஞை. இந்த நிலையில் முழு விழிப்புணர்வு நிலையின் வடிவம் இராமபிரான். தான் என்ற மனமற்ற நிலையினன் சத்ருக்னன். நான் என்பது இல்லாது செயல்பட்டவன் பரதன். நன்மை தீமை அறியும் விழிப்புணர்வினன் இலக்குவன். ஆக, தசரதனின் பிள்ளைகள் நால்வரும் வாழ்க்கை இன்னதென உணர்ந்த தத்துவ ஆன்மாக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றை நோக்க, மனிதனை உயர்நிலைக்குக் கொண்டு செல்லும் ஆற்றல் தத்துவம் இது ஆகிறது. உண்மை அறிவைப் பூரணமாக நல்குகின்றது. இராமாயணக் கதாபாத்திரத்தில் பலரும் தத்துவ ஞானிகளாக விளங்கி, உயிரை இயக்கும் சக்தி பெற்றமை குறிப்பிடத்தக்கது. விழிப்புணர்வைச் சரியாகப் பயன்படுத்தி மேன்மை பெற தத்துவ முத்துக்களை உரைப்பது இராமாயணம். எனவே, இராமாயணம் உணர்த்தும் தத்துவம் என்ற நோக்கில் இக்கட்டுரை வழி தத்துவக் கருத்துக்களைக் காணப்புகுவோம்.

## செயல்பாட்டுத் தத்துவம்

பாரதத்தின் மிகச் சிறந்த பொக்கிஷமாகக் கருதப்படுவது இதிகாசங்களாகிய இராமாயணம் மற்றும் மகாபாரதம். இவற்றினுள் இராமாயணம் தொன்மை வாய்ந்தது என்பதோடு மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் எப்படி வாழ வேண்டும் என்பதைச் சொல்லாமல் வாழ்ந்து காட்டிய சரித்திரக் காவியம். இக்காவியம் ஒரு செயல்பாட்டுக் காவியம் என்று சொன்னால் அது மிகையாகாது. ஒவ்வொரு



- ஓவியக்காணிக்கை
திருமதி உஷாமணி, சென்னை, 9962772507




கதாப்பாத்திரத்தின் வாழ்வின் மூலம் அரிய சிறந்த தத்துவத்தை ஊன்றிப் பார்த்தால் மட்டுமே நன்கு உணர முடியும்.

*''சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்*
*சொல்லிய வண்ணம் செயல்''*

என்னும் வள்ளுவர் கூற்றுப்படி வாழ்ந்து காட்டிய பரமாத்மா இராமபிரான், ஏக பத்தினி விரதன், பிற மாதரை ஏறெடுத்தும் நோக்காத ஆண்மை வேண்டும் என்று உணர்த்திய உத்தமசீலன்.

### தந்தை சொல்லே மந்திரம்

அரண்மனை அதனில் சுகபோக வாழ்வுற்ற இராமன் கைகேயி தசரதனிடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க வனம் ஏக வேண்டிய சூழ்நிலை. பட்டாபிஷேகத்திற்கான எல்லா ஏற்பாடுகள் தயார். அதற்கு உரியவனும் இராமபிரானே. இருந்தும், தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்று உறுதி பூண்கிறான். தசரதர் "இராமா! நீ பதினான்கு ஆண்டுகள் வனத்தில் வசிக்க வேண்டும். பரதன் அயோத்தி மாநகரை ஆட்சி செய்ய வேண்டும்" என்று கூறிய உடனே வனம் ஏகத் தயாராகிறார்.





தந்தை சொல் மந்திரம் என்ற தத்துவத்திற்குச் சாட்சியாகப் பரந்தாமன் திகழ்கிறார். இந்த இடத்தில் மற்றும் ஒரு தத்துவம் பொதிந்துள்ளது.

### சொன்ன சொல் தவறாமை

என்றோ யாரும் அறியாமல் தசரத மகா சக்கரவர்த்தி கைகேயிக்குக் கொடுத்த வரத்திற்கு சாட்சி இல்லை என்றாலும் மனசாட்சி உள்ள ஒரு மகாவீரனாக தசரதனை இராமாயணம் காட்டுகிறது. அடுத்து, பதிவிரதை சீதா தேவி இராமர் இருக்கும் இடமே தனக்கு அயோத்தி என்று சொல்லி இல்லறத்தை நல்லறமாக ஆக்க வேண்டும் என்ற தத்துவத்திற்குச் சான்றாகிறாள்.

### கொண்ட கொள்கையில் நேர்மை

காட்டில் சீதாராமனைக் கண்ணும் கருத்துமாய் காக்க வேண்டிய அவசியம் இலக்குவனுக்கு, நித்திரா




தேவியைத் தன்னிடத்தே வாராதிருக்க வேண்டிக் கொள்கிறான். மேலும், தன் மனைவி ஊர்மிளா தான் இன்றி வருந்துவாளே என்று கருதி நித்திரா தேவியிடம் "தாயே நீ என் மனைவி ஊர்மிளாவிடம் சென்று நான் வரும் வரை காத்திருக்க வேண்டும்" என்கிறான். அல்லும் பகலும் அண்ணலைக் காவல் புரிந்து காத்த இலக்குவன் போல் வேறோர் உத்தமன் உலகில் உண்டோ?

### அறம் செய விரும்பு

எம்பெருமான் இடத்தில் பக்தி செலுத்தும் முறைகளுள் ஒன்று சரணாகதி.

*''தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை''* என்பார் குலசேகராழ்வார். இறையின் திருவடித் தாமரைகளைப் பற்றினால் எந்த இடர்

நம்மை அணுகும்? இதனைத் தெரிந்தவன் அரக்கர் குலத்தில் உதித்தவனும் இராவணனின் தம்பியுமான வீடணன், தன் உடன் பிறந்தவன் அறமல்லாத செயல் செய்வதைப் பலகாலும் அறிவுறுத்தி தர்ம வழியில் செல்ல வேண்டிக் கொள்கிறான். விதி வலியதா யிற்றே. இராவணன் செவி மடுக்காதது அறிந்து பின்னர் இராமனைச் சரணடைகிறான். அறமதில் செல்பவன் அதர்மத்திற்கு ஒருக்காலும் இணங்கான் என்ற உயரிய தத்துவம் இராமாயணம் உணர்த்தும் தத்துவங்களில் எல்லாம் முதன்மை பெறுகிறது.



## அன்பே பிரதானம்

நால்வர் உடன் பிறந்தாலும் தனக்கு நெருங்கி இருந்தவர்களை உற்ற உடன்பிறப்பாக பாவித்தவர் இராமர். இங்கு ஜாதி மத பேதம் தகர்க்கப்பட்டு அன்பே பிரதானமாக உள்ளது. வேடுவ இனத்தைச் சேர்ந்த குகன், மிருக இனத்தைச் சேர்ந்த சுக்ரீவன், அரக்கர் குலத்தைச் சேர்ந்த மாற்றான் விபீஷணன் ஆகியோரை உடன்பிறப்புக்களாக ஏற்கும் தசரத ராமனின் அன்பிற்கு ஈடு இணை எதுவும் இல்லை.





## இன்று போய் நாளை வா

போர் செய்வதிலும் தர்மத்தைப் போதிப்பது இராமாயணம். “தேவியை விடுக இன்றேல் ஆவியை விடுக” இவ்விரண்டில் ஆவியை விடத் தீர்மானித்து மறக்களம் வந்த இராவணன் உற்றார் உறவினர்களோடு பெற்ற மகன்கள், மக்கள் என எல்லோரையும் இழந்து தனியொருவனாக ஆயுதங்கள் அற்று நிராயுதபாணியாக நிற்கிறான். அந்தச் சமயத்தில் கூட இராமபிரான் கருணை உள்ளம் கொண்டு சீதையை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டார். இராவணன் அரக்கனே என்றாலும் அவனுக்குள்ளும் ஈரம், பாசம் உண்டே. எல்லாம் இழந்து விட்டோம். இனி இழப்ப தற்கு ஒன்றுமில்லை. இந்த நிலையில் சரணடைந்தால் மீண்டும் இழந்த செல்வத்தைப் பெறலாம். ஆனால் இழந்த உயிர்களைப் பெற இயலாது. அதற்குத் தண்டனை தன் இன்னுயிரை நீப்பது என்ற முடிவுக்கு வருகிறான். இராமபிரான் இன்று போய் நாளை வா என்று சொல்லி அனுப்பினார்.

இராவணன் மனது இருப்பு கொள்ளாமல் தவிக் கிறது. இறுதியில் தத்துவம் பிறக்கிறது. களத்தில் எய்துவேன் வீரமரணம். ஆணவம் அழிகிறது. பத்துத் தலை வீழ்த்தப்பட உள்ளது. எவ்வாறாயினும் எனக்கு இராமர் ஸ்பரிசம் கிடைக்கும். அது மோட்சத்தை அளிக்கும் என்று கூறி இராமரால் வீழ்த்தப்படுகி றான். இப்படியாக இராமாயணம் முழுவதும் தொட்ட இடமெல்லாம் தத்துவம் மணக்கும். அந்தத் தத்துவங் களில் ஒன்றை நிலையாகப் பற்றினால் கூட அனைத் தும் வரப்பெறும் என்பது தெளிவோம்.

*“தத்துவ சீலனே அயோத்தி வாசனே*
*நித்திய பொருளே சத்திய நிமலனே*
*நித்தம் பணிவோம் உத்தமா உன்னடி*
*ஏத்துவோம் ஏத்துவோம் நாளும் ஏத்துவோம்.”*



# கௌசல்யா எனும் தெய்வத் தாய்

- திரு.எஸ்.ஸ்ரீதுரை,
காஞ்சிபுரம்,
9486139685

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் முதன் முதலாக எடுத்த பூரணாவதாரம் மிகவும் மகத்துவம் வாய்ந்தது. சத்தியம், நேர்மை, பொறுமை, வாக்குத் தவறாமை, ஏகபத்தினி விரதம், சரணாகத ரக்ஷணம், அன்பு, கருணை, எளிமை, வீரம், தைரியம் இவை அனைத்துடன் இவ்வுல கிலுள்ளோர் அனைவரையும் வசீகரிக்கும் ஆண்மை மிக்கப் பேரழகு ஆகிய அனைத்தையும் சேர்த்து ஒரே வடிவமாக அவதரிக்கிறார் என்றால் அவரைத் தன்னு டைய திருவயிற்றில் சுமக்கின்ற தாயார் எவ்வளவு சிறப்பு வாய்ந்த பெண்மணியாக இருக்க வேண்டும் என்பதை நம்மால் நிச்சயம் புரிந்து கொள்ள முடியும்.

அப்படிப்பட்ட அற்புதமான பெண்மணிதான் ஸ்ரீராம பிரானைத் தன்னுடைய திருவயிற்றில் தாங்கிய கௌசல்யா தேவி, தசரத மஹாராஜாவின் முதல் மனைவியாகவும் பட்டமஹிஷியாகவும் விளங்கிய கௌசல்யா தேவியை "மன்னுபுகழ் கோசலை" என்றும், "மணிவயிற்றைக் கொண்டவள்" என்றும் குலசேகராழ் வார் தாம் அருளிய பெருமாள் திருமொழியில் கூறுகின்றார். தலை சிறந்த பதிபக்தி, இணையற்ற தாய்ப்பாசம், பொறுமை, அன்பு ஆகியவற்றின் உருவமாக விளங்கிய கௌசல்யாதேவி தாய்க் குலத்தவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்ததை ஸ்ரீமத்ராமாயணம் நமக்கு எடுத்துரைக்கின்றது. தசரதருடைய மற்ற மனைவியரான சுமித்திரை, கைகேயி ஆகியவர் களுடனும் ஒற்றுமையாக இருந்து அரச குடும்பத் தின் பெருமைக்குப் பெருமை சேர்த்தாள் கௌசல்யா தேவி.

தசரதரையும், கௌசல்யா தேவியையும் பொறுத்தவரையில் சாபமே வரமாக அமைந்து விட்டது எப்படி என்று பார்ப்போம்.

தசரதரிடம் "சப்தவேதி" என்ற அஸ்திரம் ஒன்று இருந்தது. மிருகங்களை வேட்டையாடச் செல்லும்பொழுது அவற்றைக் கண்ணெதிரே பார்க்க இயலாவிட்டாலும் அவை எழுப்பும் ஒலி எந்தத் திசையிலிருந்து வருகிறது என்பதைக் கொண்டு அத்திசையில் அவ்வஸ்திரத்தை எய் தால், அது குறி தவறாமல் சென்று வீழ்த்தி விடும்.

கண் பார்வையில்லாத வயோதிகப் பெற்றோரின் மகன் ஒருவன் நீர் நிலையில் தண்ணீர் மொண்டு எடுத்த ஓசையை யானை தண்ணீர் குடிக்கும் ஓசை என்று தவறாக நினைத்து தசரதர் எய்த, "சப்தவேதி" அம்மகனின் உயிரைக் குடித்தது.

மகனின் இறப்பை அறிந்து துடிதுடித்த பெற்றோர்கள் இருவரும், "கண்ணில்லாத எங்களுடைய ஒரே கொழுகொம்பாகிய மகனைப் பிரிந்து நாங்கள் இனி உயிர் வாழ மாட்டோம். அவனைக் கொன்ற பாவியாகிய நீயும் புத்திர சோகத்தால் மாண்டு போவாய்!" என்று கூறிவிட்டு உடனடியாகத் தங்களின் உயிரை நீத்தனர்.

அரண்மனைக்குத் திரும்பிய தசரதர் மனைவி கௌசல்யாதேவியிடம் நடந்ததைக் கூறி வருந்தினார். மகனை இழந்த பெற்றோரின் சாபம் கிடைத்தது குறித்து இருவரும் கவலைப்

## அன்னை கௌசல்யா தேவியின் ஆலயம்



ஸ்ரீராமபிரானின் தாயார் கௌசல்யாதேவி ஆலயம் சத்தீஸ்கர் மாநிலத்தின் தலைநகராகிய ராய்பூருக்கு அருகிலுள்ள சந்த்கூரி என்ற ஊரில் அமைந்துள்ளது. மிகவும் புராதனமான இவ்வாலயம் "ராம் வன் கமன் பரிபத் காரிடார்" என்ற திட்டத்தின் கீழ் சத்தீஸ்கர் மாநில அரசால் புனரமைக்கப்பட்டுள்ளது.

கௌசல்யா தேவியின் பிறந்த வீடாகக் கருதப்படும் இவ்விடத்திற்கு ஸ்ரீராமபிரான் தம்முடைய மனைவி சீதா தேவி, தம்பி லக்ஷ்மணன் ஆகியோருடன் வனவாச காலத்தில் விஜயம் செய்துள்ளார் என்று தலபுராணம் கூறுகின்றது. நாமும் வாய்ப்புக் கிடைக்கும் பொழுது தாய்க் குலத்தின் தலைமகளாகிய கௌசல்யா தேவியின் இவ்வாலயத்திற்குச் சென்று வணங்கி வருவோம்.

பட்டாலும் "புத்திர சோகத்தால் மாண்டுபோவாய்" என்ற அச்சாபத்தின் மூலம் இதுவரை இல்லாத புத்திரபாக்கியம் தங்களுக்கு நிச்சயம் கிடைக்கும் என்று ஆறுதல் கொண்டனர்.

காலக்கிரமத்தில் தசரதர் நடத்திய புத்திர காமேஷ்டி யாகத்தின் ஹோம வேள்வியில் தோன்றிய தேவபுருஷன் அளித்த பாயஸத்தில் கௌசல்யா தேவிக்கு ஸ்ரீராமபிரானும், கைகேயிக்கு பரதாழ்வானும், சுமித்திரைக்கு லக்ஷ்மணன், சத்ருக்னன் ஆகிய இருவரும் புத்திரர்களாகப் பிறந்தனர்.

பிற்காலத்தில் மந்தரையின் சூழ்ச்சியால் மதிமயங்கிய கைகேயி ஸ்ரீராமபிரானை வனவாசம் செய்ய அனுப்ப வேண்டும் என்று தசரதரிடம் வரம் கேட்டாள். தன் மகன் ஸ்ரீராமபிரானுடன் மருமகள் சீதா பிராட்டியும் வனத்திற்குச் செல்லவிருப்பதை அறிந்த கௌசல்யா தேவி, "அம்மா சீதை! ஒரு பெண்ணுக்குக் கணவனே கண்கண்ட தெய்வம். ஜனக மஹாராஜாவின் புதல்வியாக செல்வாக்குடன் வளர்ந்த நீ தற்பொழுது அரண்மனை வாசத்தை விட்டு, கடினமான வனவாசம் செல்ல நேர்ந்ததற்காக உன்னுடைய கணவனாகிய என் பிரிய மகனின் மனம் நோகும்படியாக எதுவும் பேசிவிடாதே!" என்று அறிவுரை கூறி வழியனுப்பினாள்.

அதன் பின்னர், ஸ்ரீராமபிரான் தம்முடைய மனைவி சீதா தேவியுடனும், தம்பி லக்ஷ்மணனுடனும் வனவாசம் சென்ற நேரத்தில் அன்னை கௌசல்யா தேவி அடைந்த பெருந்துயரத்தை பெரியாழ்வார் இவ்வாறு தம் பாசுரத்தில் வடிக்கின்றார்.

*"மாற்றுத்தாய் சென்று வனம் போகே என்றிட*
*ஈற்றுத்தாய்பின் தொடர்ந்து எம்பிரான் என்றுஅழ*
*கூற்றுத்தாய் சொல்லக் கொடிய வனம் போன*
*சீற்றமிலாதானைப் பாடிப்பற, சீதை*
*மணாளனைப் பாடிப்பற"*

இப்பாசுரத்தைப் படிக்கின்ற நமது மனமும் அன்னை கௌசல்யாதேவியின் நிலை குறித்து மிகவும் வருத்துகின்றது.

பிற்பாடு, ஸ்ரீராமபிரானைச் சந்திப்பதற்காகக் காட்டிற்குக் கிளம்பிய பரதாழ்வான், செல்லும் வழியில் தான் சந்தித்த குகனிடம் தன் பெரிய தாயார் கௌசல்யா தேவியைக்காண்பித்து, *"மூவுலகம் ஈன்றானை முன் ஈன்றானைப் பெற்றத்தால் பெறும் செல்வம் யான் பிறந்ததால் துறந்த பெரியாள்"* என்று அறிமுகம் செய்கின்றான்.

"மூவுலகையும் படைத்த பிரம்மாவைத் திருவுந்தியில் பிறக்க வைத்தவராகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே ஸ்ரீராமனாக அவதரித்தார். ஸ்ரீராமபிரான் என்னும் அந்தப் பெரும் செல்வத்தைத் தன் திருவயிற்றில் சுமந்து பெற்ற பெரியவளாகிய இந்தக் கௌசல்யா தேவி, கைகேயியின் மகனாக நான் பிறந்த காரணத்தால் அந்தப் பெரும்

செல்வத்தை இழந்து வாடுகின்றாள்'' என்பது இதன் எளிய விளக்கமாகும். ஸ்ரீராம பிரானைப் பெற்று வளர்த்துச் சீராட்டிய அன்னை கௌசல்யா தேவி பாரதநாட்டின் தாய்க் குலத்தவர்களின் தலைமகளாக விளங்கி வழிகாட்டியிருக்கின்றாள்.

இதனால்தான், புனிதமான நமது பாரத தேசத்திலுள்ள விஷ்ணு தலங்கள் அனைத்திலும், நம் அனைவரின் இல்லங்களிலும் தினந்தோறும் தவறாமல் ஓதப்படுகின்ற சுப்ரபாதத்தின் தொடக்கத்திலேயே அன்னை கௌசல்யா தேவியின் திருப்பெயர் ஒலித்து நம் செவிகளிலெல்லாம் நிற்கின்றது.

மகரிஷி விசுவாமித்திரர் பாடிய

*''கௌசல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே*
*உத்திஷ்ட நர சார்த்தூல கர்தவ்யம் தைவம் ஆஹ்நிகம்''*

என்ற புனிதமான சுப்ரபாத சுலோகம் ஸ்ரீராமபிரானை ஈன்றெடுத்த மணிவயிற்றுக்குரிய அன்னை கௌசல்யா தேவியின் புகழை இப்பிரபஞ்சம் உள்ளளவும் பரப்பிக் கொண்டிருக்கும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை.

தொடர்ந்து அலசுவோம்...

புனித மிருகசீரிடம் வானில் எழ
புத்தெழில் பூக்க பரிதி உதிக்க
பால ராமர் அவனி அடைந்தார்
ஜெய் ஸ்ரீராம் ஜெய் பாலராம்!

புவனம் ராமருக்கு முகமன் கூற
பூக்களை முக்கோடி தேவர் தூவ
பால ராமர் உலகமுய்ய வந்தார்
ஜெய் ஸ்ரீராம் ஜெய் பால ராம்!

பூரித்த புள்ளினம் பூபாளம் பாட
புதிய தீபங்கள் வீடுகளில் ஒளிர
பாலராமர் அயோத்தி மீண்டார்
ஜெய் ஸ்ரீராம் ஜெய் பாலராம்!

பிறவித் தலைவன் அயோத்தி சேர
பாரதம் ராமராஜ்யமாக விளங்க
பாலராமர் வேள்வியை ஏற்றார்
ஜெய் ஸ்ரீராம் ஜெய் பாலராம்!

பூரண வேதியர் மந்திரங்கள் ஓத
புனித நதிகள் பூசனைக்கு நீராக
பால ராமர் குடமுழுக்கு கண்டார்
ஜெய் ஸ்ரீராம் ஜெய் பாலராம்!

புராண இதிகாசங்கள் மீண்டெழ
புவியெங்கும் ராம நாமம் ஒலிக்க
பால ராமர் கோயில் கொண்டார்
ஜெய் ஸ்ரீராம் ஜெய் பாலராம்!

புலர் பூக்கள் தோரணங்கள் ஆக
பஞ்ச பூதங்களும் ராமர் வசமாக
பாலராமர் உணர்வில் கலந்தார்
ஜெய் ஸ்ரீராம் ஜெய் பாலராம்!

புண்ணிய சரயுவில் பக்தர் நீராட
பக்தி வெள்ளத்தில் மக்கள் நீந்த
பால ராமர் சேவை சாதிப்பார்
ஜெய் ஸ்ரீராம் ஜெய் பாலராம்!

புடைசூழ் தம்பியர் வீரபடையாக
பக்த அனுமன் ராமர் தூதுவனாக
பாலராமர் அறநெறி பேணுவார்
ஜெய் ஸ்ரீராம் ஜெய் பாலராம்!


பாரே ராமருக்கு தலை வணங்க
பாரதம் பூலோக சொர்க்கம் ஆக
பால ராமர் கலியுக அரசனாவார்
ஜெய் ஸ்ரீராம் ஜெய் பாலராம்!

## ஜெய் ஸ்ரீராம் !
## ஜெய் பால ராம் !!

**– அன்பன் தி.சுவாமிநாதன்,**
**கோவை,**
**9013300706.**



# வைணவக்குறுக்கெழுத்துப் புதிர் -93




### இடமிருந்து வலம்

1. தசரதன் செய்த யாகம்...(11)
5. சீதாப்பிராட்டியின் மனதைக் கவர மாயமானாக வந்தவன்.....(4)
10. சீதையின் பெயர்களுள் ஒன்று......(3)
16. இராமபிரானுக்கு உதவி புரிய அங்கதனாகப் பிறந்தவர்....(6)
19. திருமாலின் சங்கின் அம்சமாகப் பிறந்தவர்.....(6)
21. இராமபிரானின் தாயார்.....(4)
22. இராவணனை அழிக்கத் திருமால் எடுத்தது....(7)

### வலமிருந்து இடம்

4. சாம்பவனாகப் பிறந்தவர்....(7)
8. இராவணனின் மனைவி....(5)
9. திருமாலின் சக்ரத்தின் அம்சமாகப் பிறந்தவர்....(6)
12. இராமாயண காலம்....(6)
17. நீலனாகப் பிறந்தவர்.....(6)
18. ஆதிசேஷனின் அம்சம்....(6)
20. இராவணனின் சகோதரி....(6)
23. இராமஜென்ம நட்சத்திரம்....(6)

### மேலிருந்து கீழ்

2. தசரதனுக்கு புத்திரப் பேறு யாகம் செய்ய உதவிய ரிஷி.....(10)
3. இராமனுக்கு படகு ஓட்டியவன்........(3)
6. மாருதியாக அவதரித்தவர்......(6)
7. இராமரால் வதம் செய்யப்பட்ட அரக்கி....(3)

### கீழிருந்து மேல்

11. சீதையை மீட்க, கடலில் வானரங்கள் அமைத்தது.....(5)
13. இராமபிரானிடம் சரணடைந்த இராவணனின் சகோதரன்....(5)
14. இராம, இலக்ஷ்மணரின் மயக்கம் தெளிவிக்க அனுமன் ....(6)யைக் கொண்டு வந்தார்
15. இராவணனின் மகன்.....(5)
20 சுக்ரீவனாக அவதரித்தவர்....(4)


தொகுப்பு :
திருமதி இராஜகுமாரி, ஆரணி
99762 38430



புதிருக்கு விடை அறிய 32ம் பக்கம் பார்க்கவும்...


## மங்கள சுலோகங்கள்



*அகஸ்திர் மாதவஸ்சைவ*
*முசுகுந்தோ மஹாபலஹ|*
*கபிலோ முனிரஸ்தீகஹ்*
*பஞ்சைதே ஸுகசாயின ஹ||*

அகஸ்தியர், மாதவர், பலசாலியான முசுகுந்தர், கபிலர், அஸ்தீகர் இவ்வைவரும் சுகமாக (படுத்து) உறங்குபவர்கள்.

மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்



*சென்ற இதழின் தொடர்ச்சி...*

திருமலையில் குகை ஒன்றினைக் கண்டவுடன் வானரங்கள் திகைப்படைந்தன. இக்குகையில் என்ன உள்ளதோ என்று மிகவும் மகிழ்ச்சியுடன் சென்று பார்த்தன. அக்குகை மிகவும் பெரியதும், நீண்டதுமாய் இருந்தது. அதுமட்டுமல்லாமல். குகை முழுவதும் இருளால் சூழ்ந்திருந்தது. இருந்தாலும், வானரங்கள் மகிழ்ச்சியோடு முன்னேறின. அந்தக் குகையில் ஒரு திவ்ய ஜோதியைக் கண்டன. அந்த ஜோதியின் அருகில் செல்ல வேண்டும் என எண்ணி அதை நோக்கி நடந்தன.

அந்தக் குகை சாதாரணமான குகை அல்ல. அந்தக் குகையில் வௌவால்கள், பாம்புகள், சிலந்திகள் மட்டும் அல்லாது, தங்கம், நவரத்தினங்களால் வேயப்பட்ட கோபுரங்களுடன் கூடிய சுவர்கள் காணப்பட்டன. மண்டபங்கள் எல்லாம் வைரம், வைடூரியம், மாணிக்கம், மரகதத்தால் பதிக்கப்பட்டவை. அங்கே அதிசயிக்கத்தக்க மண்டபங்கள், எங்கு பார்த்தாலும் பச்சைத் தோரணங்களாலான தங்கத்தேர்கள், யானைகளும், குதிரைகளும் தாராளமாகத் திரியுமளவிற்கு விசாலமானதாகவும் இருந்தது. அங்கு இன்னிசையுடன் கூடிய நாட்டியங்கள் நடைபெற்றுக் கொண்டு இருந்தன. விதவிதமான வாத்தியங்கள் இசைக்கப்பட்டு கொண்டிருந்தன. எங்கு பார்த்தாலும் அழகியர்களின் நடமாட்டம் காணப்பட்டது. அது மட்டும் அல்லாது அங்கு நான்கு திருக்கரத்தானும், கதாதர்கள், சங்கு சக்கரதாரிகளாக நடமாடிக் கொண்டு இருந்தனர்.

அக்குகை பூதலத்தில் உள்ள குகைபோல் தென்படவில்லை. வித்தியாசமாகக் காணப்பட்டது. மிகவும் ஒளிமயமானதாக விளங்கியது. அக்குகையின் நடுப்பகுதியில் ஒரு கோபுர விமானம் இருந்தது. அங்கு வானர வீரர்களுக்கு லக்ஷ்மி நாதன்சேஷ சயனராகக் காட்சி அளித்தார். ஸ்வாமியின் திருமார்பில் திருமகளும், இரு புறங்களிலும் பூதேவி, நீளா தேவியும் அமர்ந்தபடி ஸ்வாமியைத் தரிசித்த வண்ணம் இருந்தனர்.

இதைக்கண்ட வானர வீரர்களுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. வானரவீரர்களைக் கண்ட காவலன் ஒருவன் அங்கிருந்து விரட்டிக் கொண்டு வந்தான். வானரர்கள் அவனைப் பார்த்து அஞ்சி ஓடினர். அவர்கள் அஞ்சி ஓடும் நிலையைக் கண்டு ஒரு காவலன் அவர்களுக்கு வெளியே செல்வதற்கான வழியைக் காட்டினான். வானர வீரர்கள் தப்பிப் பிழைத்தோம் என்று நினைத்தபடியே குகையின் வெளிப்புறத்திற்கு வந்தனர். சிறிது

### பிழைதிருத்தம்

மார்ச் 2024 இதழில் பக்கம் எண் 6ல் "புரட்சிக் கவி பாரதிதாசன், *"மங்கையராகப் பிறந்திடவே மா தவம் செய்திட வேண்டுமம்மா"* என்று போற்றுகின்றார்" எனும் வரியில் புரட்சிக்கவி பாரதிதாசன் என்பதற்கு பதிலாக கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை என்று மாற்றி வாசிக்கவும்.

நேரம் தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, பிறகு அந்தக் குகையில் இருந்த அதிசயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். அவர்களில் ஒருவன் "ஸ்ரீராமரோடு போராட முடியாமல் இராவணன் இந்தக் குகையில் மாறு வேடத்தில் மறைந்திருக்கிறானோ என்னவோ! என்று கூற, அதற்கு மற்றொரு வானரவீரன், "இல்லை, இல்லை இது இராவணனின் மாயை இல்லை. இது ஹரி மாயை" என்று உறுதியாகக் கூறினான். சரி, நாம் வீணாகப் பேசிக் கொள்வது எதற்கு, நாம் மீண்டும் குகைக்குள் சென்று பார்த்து வரலாம் என்று உபாயம் சொன்னவுடன் ஒருவன், நாம் மட்டும் போவது எதற்கு? நம்முடன் வந்த அனைவரோடும் செல்லலாமே என்று தம் கருத்தைச் சொன்னான்.

வானரத் தோழர்களே! நீங்கள் கனவு கண்டுக் கொண்டு இருக்கிறீர்கள். இவையெல்லாம் பிரமை என்று சிலர் கூறினர். இல்லை இல்லை நாம் பார்த்தது எல்லாம் உண்மை என்று அறுதியிட்டு சில வானரங்கள் கூறின. இவ்வாறாக ஒருவருக்கொருவர் தம் கருத்துக்களைச் சொல்லி விவாதித்துக் கொண்டிருக்கையில் அங்கிருந்த குகை திடீரென மறைந்தது. இதைக் கண்டு அவர்கள் திகைப்புற்று நின்றனர். அதன் பிறகு வானரவீரர்கள் ஸ்ரீராமபத சன்னிதிக்கு வந்தனர். அங்கு இருந்த ஸ்வாமியிடம் தாம் கண்டதை எல்லாம் விரிவாக எடுத்துச் சொன்னார்கள். வானர வீரர்களின் அனுபவத்தைக் கேட்டுக் கொண்டிருந்த ஸ்ரீராமன் புன்னகைத்தபடி இவ்வாறு கூறினார்.

"வானர வீரர்களே, எந்த ஒரு செயலிலும் உள்ள உண்மையை அறிந்து கொள்வதற்குச் சரியான பார்வையும், ஆழ்ந்த ஆராய்ச்சியும் தேவை. ஆயினும் தேவர்களின் பிறப்பும், அரசர்களின் பிறப்பும், நதிகள் உற்பத்தியாகும் இடத்தைப் பற்றியும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கருத்துக் கூறுவது சரியல்ல.

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

பெருமை அறிவோம்...

# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*க$_3$ங்க$_3$ாதடாத்$_3$யாத$_3$வமந்த்ரவச்யோ கே$_3$ாவிந்த$_3$*
*ப$_4$ட்டஸ்ஸ்வகரஸ்த$_2$ லிங்க$_3$:।*
*ஸ்வக்$_3$ராமமாக$_3$ம்ய ச காலஹஸ்திந்யவாஸ்த*
*தத்ஸ்த$_2$ாநவிசாரகஸ்ஸந் ॥*
(29)



**யாதவரின் மந்திரசக்திக்குக் கட்டுப்பட்ட கோவிந்தரும் கங்கையில் நீராடும்போது தமது உள்ளங்கையில் சிவலிங்கத்தைப் பெற்றவராய், தமது கிராமமான மதுரமங்கலத்திற்குச் சென்று அந்த லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து காளஹஸ்திக்குச் சென்று அங்குள்ள சிவாலய கார்யங்களை நிர்வகிப்பவராய் அங்கு வசித்து வந்தார்.**

**– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது**












# இராமாயண இதிகாச சிறப்பை எடுத்துரைக்கும் ஸ்ரீராமனின் கலைமிகு சிற்ப வடிவங்கள்

**வை**ணவ திவ்ய தேசங்கள் – 108–ல் திருப்புல்லாணி – சயன ராமர், திருபுள்ளம் பூதங்குடி – ஸ்ரீவல்வில் ராமர், திருவெள்ளியங்குடி – திரு கோலவில்லி ராமர் ஆகிய மூன்று திவ்ய தேசங்களில் கிடந்த கோலத்தில் எழுந்து அருளியுள்ள ஸ்ரீராமச் சந்திர மூர்த்தி வடிவங்களைத் தஞ்சையை ஆண்ட நாயக்கர் காலத்தில் கட்டப்பட்ட கும்பகோணம் அருள்மிகு ஸ்ரீராமஸ்வாமி திருக்கோயிலில் உள்ள ஒரு தூணில் புடைப்புச் சிற்பமாகக் காணலாம்.

### இச்சிற்பத்தின் சிறப்பு

கந்தர்வர்கள் கானம் இசைக்க பாம்பணையில் துயில் கொள்ளும் பாற்கடல் வாசனாக அம்புறா (அம்புகள்) மற்றும் கோதண்டத்துடன் சயனித்திற்கும் அன்னை ஸ்ரீசீதா தேவியின் பதியான ஸ்ரீகோதண்டராமரின் கலைமிகு எழில் வடிவம் மிக அரிதான வகையில் அமைக்கப் பட்டுள்ளது கூடுதல் சிறப்பாகும்.

### இராமர் கருட சேவை சிற்பம்

இராமாயணத்தில் சீதா தேவியை அபகரித்து சென்ற இராவணனிடமிருந்து அன்னையை மீட்க நடைபெற்ற போர் முனையில் இராவணனின் மகன் இந்திரஜித் இராமபிரானை எதிர் கொண்டு நாகாஸ்திரத்தை ஏவினான். அதனால் ஸ்ரீராமனும், லக்ஷ்மணனும் மூர்ச்சையாகி வீழ்ந்து விடவே, இதை கண்ட நாரதர் உடனே வைகுண்டம் சென்று கருடனிடம் “இராமபிரானை இந்திரஜித்தின் நாகபாஸத்திலிருந்து விடுவிக்க உன்னால் மட்டுமே முடியும். நீ சென்று இராமபிரானைக் காப்பாற்ற வேண்டும் என்கிறார்.

அதனை ஏற்ற பெரிய திருவடியான கருட பகவான் யுத்த களத்திற்கு வந்து தனது சிறகுகளால் வீசி அவர்களை மூர்ச்சையிலிருந்து தெளிய வைத்தார் என்று இராமாயண காவியம் எடுத்துரைத்துள்ளதை மெருகூட்டும் வண்ணம் சிறிய திருவடியான வாயு புத்திரன் அனுமன் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியைத் தனது

புஜத்தில் ஏந்தியுள்ளது போல் (திருவிடந்தையில் உள்ள தூண் சிற்பம்), ஸ்ரீகருட பகவான் தனது புஜத்தில் ஏந்தியுள்ள காட்சியுடைய ஸ்ரீராமனின் கருட புடைப்புச் சிற்பம் (பேரூர் சிவாலயத்திலுள்ள தூண் சிற்பம்).

ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் மிளிரும் கும்பகோணம் கீழ்கோட்டம் அருள்மிகு நாகேஸ்வரர் ஆலய கற்பக்கிருக திருச்சுற்றில் அமையப் பெற்றுள்ள இராமாயணச் சிற்பத்தின் சிறப்பு. இராமாயண இதிகாச காவியத்தில் இலங்கை மாநகரில் அசோக வனத்தில் சிறை வைக்கப்பட்டுள்ள அன்னை சீதா தேவியை மீட்டு வர இராமபிரான் கடல் கடந்து செல்வதற்கு கல் சுமந்து வந்து பாலம் அமைக்கும் பணியில் வானர சேனைகள் ஈடுபட்டுள்ள காட்சியைக் கண் முன் பதிவு செய்யும் கற்சிற்பம்.

*சிற்பம் தரிசிப்போம்...*

## வாழ்வியல் நெறிகள்...

*வேதத்தின் உட்பொருள் மண்ணாசை மங்கையை விட்டுவிடப்*
*போதித்த வன்மொழி கேட்டிலையோ? செய்த புண்ணியத்தான்*
*ஆதித்தன் சந்திரன் போலே வெளிச்சம் தாம் பொழுது*
*காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே!* – பட்டினத்தார்

**பொருள் : வேதத்தின் உட்பொருளான சிவபெருமான், மண்ணாசையையும், பொன்னாசையையும், பெண்ணாசையையும் விட்டு விடும்படிக் கூறியதைக் கேட்கவில்லையோ? மனமே! பூர்வ புண்ணியத்தால், சூரிய சந்திர ஒளிபோல, ஆத்மா ஒளிமயம் ஆகிறபோது (உயிர் துறக்கும் காலத்தில்) மரணத்தின் பின்னுள்ள வழித்துணைக்குக் காதறுந்த ஊசியும் உடன் வராது!**



**வாழ்வியலுக்கான கருத்து : மண்,பெண்,பொன் முதலிய மூவகைகளில் மயங்கிக் கிடக்காது, இறைவன் திருவடிகளைப் பற்றுக் கோடாகக் கொள்வோர் நரகமாகிய இருளில் வீழ மாட்டார்கள். ஆன்மா ஒளி மயம் ஆகும்பொழுது, அதற்கு எப்பொருளும் துணையாவதில்லை.**

**திருவெண்காடராகிய பட்டினத்தார், தன் மகன் மருதப்பன், திரைகடலோடித் திரவியம் தேடி வந்தபோது, அக்கப்பலில் எரு மூட்டைகளான வரட்டியும், அவல்பொரிகடலையும் இருந்தன. அப்பொருள்களைக் கண்டு ஊரார், "உன் மகன் மருதப்பன், பித்தனோ? கப்பல் நிறைய உபயோகமற்ற பொருள்களைக் கொண்டு வந்துள்ளானே" என்று கேலி பேசினர். பட்டினத்தார், அவற்றை எடுத்துப் பார்த்தார். அவற்றினுள்ளே நவரத்தினங்கள் மின்னின. மருதப்பன் வியாபாரத் திறமையை வியந்து அவரைக் காணச் சென்றார். மருதப்பன் அங்கே இல்லை. ஒரு பெட்டியைத் தன் தாயாரிடம் கொடுத்துச் சென்றார். அதைத் திறந்தபோது அதில் காதறுந்த ஊசியொன்றும், ஓலைச் சீட்டு ஒன்றும் இருந்தன. அவ்வோலையில் "காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" என்று எழுதியிருந்தது. அந்த ஞான உரையைக் கண்டதும், பட்டினத்தார் தம் செல்வங்களை எல்லாம் உதறித் தள்ளித் துறவறம் மேற்கொண்டார்.**

**எனவே மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை கொண்டு திரியாமல் செல்வங்களைச் சேர்த்துச் சேர்த்து மறைத்து வைப்பதில் பயனில்லை; எல்லார்க்கும், குறிப்பாக ஏழைகளுக்குக் கொடுத்து, பசித்தோர்க்கு அன்னமிட்டு இருந்தால் வாழ்க்கையின் பயன் அதுவே என்பதைப் பட்டினத்தாரின் பாடல் நமக்கு வாழ்வியல் நெறியாக அமைகிறது.** ***-தொகுப்பு :முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை***

## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

16-02-2024 அன்று திருமலையில் ஒரு நாள் பிரம்மோத்ஸவமாக மிகச் சிறப்பாக கொண்டாடப்படும் இரத சப்தமியை முன்னிட்டு திருமலையப்ப ஸ்வாமி ஏழு வாகனங்களில் எழுந்தருளியத் திருக்காட்சிகள்.



















**01–03–2024 முதல் 10–03–2024 வரை சிவராத்திரியை முன்னிட்டு நடைபெற்ற திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள். அதுபோது பல்வேறு வாகனங்களில் உமையம்மையுடன் ஸ்வாமி எழுந்தருளிய திருக்காட்சிகள்**



















29-02-2024 முதல் 08-03-2024 வரை நடைபெற்ற ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர் திரு.வி.வீரபிரம்மம் ஐ.ஏ.எஸ்.அவர்கள்





















17-02-2024 முதல் 23-02-2024 வரை திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலய புஷ்கரணியில் நடைபெற்ற தெப்போத்ஸவத் திருக்காட்சி. அதுபோது ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி, ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமி, ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி தெப்பத்தில் எழுந்தருளினர்



08-02-2024 முதல் 10-02-2024 வரை தி.தி.தே. தாஸ சாஹித்ய செயல் திட்டம் வாயிலாக திருமலையில் நடைபெற்ற ஸ்ரீபுரந்தர தாசர் ஆராதனை உத்ஸவம்



09-03-2024 அன்று திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் உமையம்மைக்கும் ஸ்வாமிக்கும் நடைபெற்ற திருக்கல்யாணத் திருக்காட்சி



10-03-2024 அன்று ஸ்ரீகாளஹஸ்தியில் கொலுவீற்றிருக்கும் ஸ்ரீகாளஹஸ்தீஸ்வர ஸ்வாமிக்கு தி.தி.தே. சார்பில் பட்டு வஸ்திரங்கள் சமர்ப்பித்த தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ்.அவர்கள்



04-03-2024 அன்று ஸ்ரீசைலம் ஸ்ரீமல்லிகார்ஜுன ஸ்வாமிக்கு தி.தி.தே. சார்பில் பட்டு வஸ்திரங்கள் சமர்ப்பித்த தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ்.அவர்கள்



# சித்ரா பௌர்ணமி



- முனைவர் திருமதி பா.காயத்ரி, அம்பத்தூர், 9447640112.

தமிழ்ப் புத்தாண்டின் முதல் மாத மாக சித்திரை மாதம் கொண்டாடப்படுகிறது. அச்சிறப்பு மிக்க சித்திரை மாதத்திற்கு சிறப்பூட்டும் விதமாக "சித்ரா பௌர்ணமி" அமைந்துள்ளது. சித்திரை மாதத்தின் சித்ரா நட்சத்திரத்தின் பௌர்ணமி நாள் "சித்ரா பௌர்ணமி''யாகக் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் சந்திர தரிசனம் சிறப்பு.

புராணங்களின்படி பிரம்ம தேவரின் மானஸ புத்திரராக யமதர்மனுக்கு உதவி செய்யும் பொருட்டு தோன்றியவரே "சித்திர குப்தர்". அத்தினமே சித்ரா பௌர்ணமியாகக் கொண்டாடப்படுகிறது. சித்திர குப்தர் பூலோகத்தில் வாழும் அனைத்து ஜீவ ராசிகளின் புண்ணிய பாவக் கணக்கை எழுதுபவர் ஆவார். எந்த ஜீவ ராசியானாலும் மரணத்திற்குப் பின் சித்திர குப்தர் அஜ்ஜீவராசியின் கணக்கை யமதர்ம ராஜாவிடம் சமர்ப்பிப்பார். இக்கணக்கின் அடிப்படையில்தான் அஜ்ஜீவனுக்கு சுவர்கமோ, நரகமோ, புனர்ஜன்மமோ அல்லது பிறப்பில்லா பகவத் பாதமோ அருளப்படுகிறது. எனவே இத்தினத்தில் சித்திர குப்தரை வழிப்பட்டு, ஜீவன்கள் தங்கள் பாவங்களை மன்னித்தருளுமாறு வேண்டுவர்.

சித்ரா பௌர்ணமி தினத்தன்று புனித நதிகளில் நீராடுதல் சிறப்பு. அதுவும் திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள "சித்ரா நதி"யில் சித்திர குப்தரை நினைத்து புனித நீராடினால் அனைத்துப் பாவங்களும் அழியும் என்று நம்பப் படுகிறது. கேரள மாநிலத்தில் திருவனந்தபுரத்திலுள்ள பாசல்லூர் என்னும் ஊரில் "சித்ரா பௌர்ணமி வலிய தோட்டம் பகவதி" என்னும் தொன்மையான கோயில் அமைந்துள்ளது. இங்கு கடந்த 200 வருடங்களாக சித்ரா பௌர்ணமி நாள் மிகவும் விமரிசையாகக் கொண் டாடப்பட்டு வருகிறது. சித்ரா பௌர்ணமி

**கண்ணன் கருத்துரை**

*மன்மனா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு।*
*மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மானம் மத்பராயண:॥*

(9-34)



**மாறாத பக்தி கை கூட வேண்டும் என்றால் எந்தச் செயல் செய்தாலும் உன் மனதை என்னிடம் வை; என்னிடம் எப்போதும் அன்புடன் இரு; என்னைப் பலவகையாலும் வழிபடு; எனக்குள் அடைக்கலம் ஆகிவிடு. இப்படி மனதை என்னிடம் ஒப்படைத்தால் இறுதியில் என்னையே அடைவாய்.**



தொகுப்பு:
பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன்,
திருப்பதி.

## 2024, மே மாதப்
## பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 10 | பரசுராம ஜெயந்தி, அக்ஷய திருதியை |
| 12 | இராமாநுஜ ஜெயந்தி, சங்கர ஜெயந்தி |
| 14 | திருப்பதி கங்கை அம்மன் சித்திரைத் திருவிழா |
| 16-24 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 17-19 | திருமலை ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயம் |
| 21-29 | ரிஷிகேஷ்/நாராயணவனம் ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 20-23 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வஸந்தோத்ஸவம் |
| 22 | ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி, தரிகொண்ட வெங்கமாம்ப ஜெயந்தி |
| 23 | ஸ்ரீகூர்ம ஜெயந்தி, அன்னமய்யா ஜெயந்தி |

அன்று, பொதுவாக தமிழ் நாட்டில் முருகப் பெருமானுக்கு விரதம் இருந்து வழிபடுவது வழக்கம். மேலும், இத் தினத்தில் தானம் மற்றும் சத்-விஷயங்கள் செய்தால் சிறியதாயினும் பன்மடங்கு பலன் கிடைக்கும் என்றும் நம்பப்படுகிறது.

சித்ரா பௌர்ணமி நாளன்றுதான் மதுரையில் கள்ளழகர் வைகையாற்றில் இறங்கி மாண்டுக மகரிஷிக்கு விமோச னம் தந்த வைபவம் மிகவும் விமரிசை யாக நடைபெறும். மேலும், இத்தினத்தில் குற்றாலத்தில் அருள்புரியும் செண்பகா தேவிக்கு விசேஷ பூஜை நடைபெறும் என்றும், அப்போது சந்தன வாசனையு டன் மழை பொழியும் என்றும் நம்பப்படு கிறது.

காஞ்சிபுரத்தில் சித்திர குப்தருக்கு ஒரு தனிக் கோயில் அமைந்து உள்ளது. அங்கு சித்ரா பௌர்ணமி நாளன்று விசேஷ பூஜைகள் நடைபெறும். இந் நாளில் "சித்திர குப்த விரதம்" மிகவும் விசேஷமானது. மேலும், இத்தினத்தில் காஞ்சி ஸ்ரீவரதராஜ சுவாமி "நடவாவி" உத்ஸவம் மிகச் சிறப்பானதாகும். அத்தினம் காஞ்சி ஸ்ரீவரத ராஜ ஸ்வாமி இராமாநுஜருக்கு அருள் செய்த வைபவத்தை நினைவூட்டும் வகையில் "நடவாவி" என்னும் கிணற்றுக்குள் எழுந்தருளுவார். மேலும், இத்தினத்தில் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் சிறப்பு தேவேந்திர பூஜை நடைபெறுமாம்.

திருவண்ணாமலை மாவட்டம், அண்ணாமலையார் கோயிலில் சித்ரா பௌர்ணமி கிரிவலம் மிகவும் பிரசித்தி பெற்ற தாகும். குமிலி அருகிலுள்ள பெரியார் புலிகள் காப்பகத்தில் அமைந்துள்ள மங்களா தேவி கோயிலில் சித்ரா பௌர்ணமி பூஜைக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரளுவர்.

மேலும், இந்நாளில்தான் காஞ்சிபுரம் ஸ்ரீவரதராஜ பெருமாள் "நடதாரி" உத்ஸவம் நடைபெறும். அதாவது பிரம்மா வுக்கு பகவான் அருள் புரிந்த வைபவத்தை நினைவூட்டும் விதமாக சித்ரா பௌர்ணமியன்று ஸ்ரீவரதராஜ பெருமாள் பாலாறு நதிக்கரையோரத்தில் திருவீதி உலா செல்வார்.

இத்தனை சிறப்பு வாய்ந்த இந்த "சித்ரா பௌர்ணமி" நாளில் பக்தர்களாகிய நாமும் பகவானை சேவித்து, அவன் அருளைப் பெறுவோம்.

## வைணவக்குறுக்கெழுத்துப் புதிர்
## - 93க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பு | த் | தி | ர | கா | மே | ஷ் | டி | யா | 2 க | ம் | 3 கு |
| ன் | வ | தே | ம | ம் | ர | 4 பி | ம் | | லை | லை | க |
| | 5 மா | ரீ | ச | ன் | | 6 வா | ல | ர் | க் | ம | ன் |
| 7 தா | ரி | த | டோ | ண் | 8 ம | யு | பா | ண | கோ | வி | த |
| ட | ர் | வா | ழ் | தா | ர | 9 ப | து | ஷ் | ட் | சீ | நா |
| கை | | 10 மை | தி | லி | | க | 11 சே | பீ | டு | ஞ் | க |
| ம் | க | யு | தா | ரே | 12 தி | வா | | 13 வி | மு | 14 ச | 15 மே |
| | 16 தே | வே | ந் | தி | ர | ன் | வ | தே | னி | க் | 17 அ |
| ன் | வ | கு | க் | ல | 18 இ | ய | | | வ | | |
| 19 ச | த் | ரு | க் | ன | ன் | ரி | | | ர் | | |
| | கை | ன | ப | ப் | ர் | 20 சூ | | 21 கௌ | ச | ல் | யா |
| 22 இ | ரா | மா | வ | தா | ர | ம் | ச | பூ | ர் | ன | 23 பு |

# சேர நாட்டில் சக்கரவர்த்தி திருமகன்



சேர நாட்டில் பல திருக்கோயில்கள் உள்ளன. அதில் சில திருக்கோயில்கள் திவ்ய தேசமாகவும், சில திருக்கோயில்கள் அபிமானத் தலமாகவும் உள்ளன. அவற்றில் சில திருக்கோயில்களுக்கு நாம் இராமாயண யாத்திரை செல்வோம் வாருங்கள்.

கேரளாவில் "நாலம் பலம்" என்று நான்கு இராமாயணம் தொடர்புடைய திருக்கோயில்கள் சிறப்பு வாய்ந்தவை. இந்தத் திருக்கோயில்கள் இராமர் மற்றும் அவருடைய தம்பிகளான பரதன், லக்ஷ்மணன், சத்ருக்னன் தொடர்பு உடையது. த்ரிப்ரயார் (ஸ்ரீராமர்), கூடல்மாணிக்யம் (பரதன்), திருமூழிக்களம் (லக்ஷ்மணர்), பாயம்மாள் (சத்ருக்னன்). மலைநாட்டில் "இராமாயண மாதம்" என்று நம் ஆடி மாதத்தில் "இராமாயணம்" படிப்பார்கள். அப்போது, இந்த ஆலயங்களைச் சேவித்தால் மிகவும் புண்ணியம் கிட்டும் என்பது இன்றளவும் உள்ள நம்பிக்கை.

## திரிப்ரயார் திருக்கோயில்

இவ்வாலயத்தில் இராமன் சங்கு, சக்கரம், ஒரு கோல் மற்றும் மாலை வைத்திருக்கிறார். இங்கே வெடி வைத்து, இராமரை சிறப்பாக வழிபடுவது வழக்கம். இங்கு அமைந்து இருக்கும் குளத்தில் மீன்களுக்கு உணவு கொடுப்பதால் நாம் மஹா விஷ்ணு அவதாரமான "மத்ஸ்ய" அவதாரத்தை கௌரவிப்பதாக ஐதீகம்.

இங்கே "சேது பந்தனம்" என்கிற இலங்கைக்கு பாலம் கட்டிய விழா சிறப்பு பெற்றதாகும். மலையாள கன்னி மாதத்தில் "திருவோணம்" நக்ஷத்திரத்தில் இந்த நிகழ்வை நடத்திக் காட்டுவார்கள். மிக அருமையாக இருக்கும்.

## கூடல்மாணிக்யம் திருக்கோயில்

இந்தத் திருக்கோயில் பரதனுக்கானதாகும். பகவானுடைய ஒரு அம்சம்தானே பரதன், அதனால், அதே போல் காட்சி அளிக்கிறார். "சங்கமேஸ்வரா" என்றும் திருநாமம் உண்டு. பரதன் எவ்வாறு இராமன் காட்டிலிருந்து திரும்பும் செய்தியைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தானோ, இராமரை காணும் ஆவல் கொண்டிருந்தானோ, அவ்வாறே இங்கு





## ஸ்ரீராம நைவேத்தியம்

**ஸ்ரீராமசந்திர மூர்த்தியின் ஜென்ம தினமாக ஸ்ரீராமநவமியானது ஒவ்வொரு ஆலயங்களிலும், கிராமம், நகரம் என்ற வேறுபாடு இல்லாமல் ஒவ்வொரு வீடுகளிலும் கொண்டாடும் ஒரு பண்டிகை ஆகும். கோடைக்காலமானதால் ஸ்ரீராமருக்கு பானகம், நீர்மோர், வடைபருப்பு போன்ற உடம்பை குளிர்ச்சியாக வைக்கும் பொருட்களை இறைவனுக்கு சமர்ப்பித்து அனைவருக்கும் வழங்கி மகிழ்வர். மேலும் சிலர் விசிறியையும் தானமாக வழங்குவர்.**



வீற்றிருக்கிறார். இங்கு வீற்றிருக்கும் திருமாலை தன்வந்தரியாகவே வழிபடுகிறார்கள். ஒரு பக்தன் சமர்ப்பித்த கத்திரிக்காயை ஏற்று, நோயை போக்கியதால் இங்கு கத்திரிக்காய் விசேஷமாகும்.

### திருமூழிக்களம் திருக்கோயில்

பரதாழ்வானும், லட்சுமணனும் ஸ்ரீராமபிரானை வழிபட்ட தலமாகும். இவ்வூரை "திருமொழிக்களம்" என்பர். ஹரித மகரிஷிக்கு மஹாவிஷ்ணு மங்கலமான மந்திரங்களை மொழித்ததால், அப்பெயர் ஏற்பட்டதாகவும் கூறுவர். இப்பெருமானை நம்மாழ்வாரும், திருமங்கை ஆழ்வாரும் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

ஸ்ரீகிருஷ்ணர், இந்த நாலம்பல விக்ரஹத்தை துவாரகையில் வழிபட்டு வந்ததாகவும், துவாரகை கடலில் மூழ்கியபோது இந்த நான்கு விக்ரஹங்களும் இங்கே வந்து சேர்ந்ததாகவும், ஒரே நாளில் இந்த நால்வரையும் பிரதிஷ்டை செய்ததாகவும் கூறுவார்கள்.

### பாயம்மாள் திருக்கோயில்

இது சத்ருக்னனுக்கான திருக்கோயிலாகும். ஏனென்றால் சத்ருக்னன் கடைக் குட்டியானாலும் அவன் பாகவத கைங்கர்யத்தில் சிறந்தவன். அதனாலேயே இது புனிதமானது. இங்கு சுதர்ஷன (சக்கரத்தாழ்வார்) புஷ்பாஞ்சலி மிகவும் முக்கியமானதாகும்.

மலையாள மொழியில் அத்யாத்மராமாயணம் என்று துஞ்சத்து ராமாநுஜன் எழுத்தச்சன் எழுதியுள்ளார். மலையாள காவியங்களில் இது முக்கியமானதும் மற்றும் இனிமையானதுமாகும். இராமாயணத்தில் உள்ள இந்த நான்கு சகோதரர்கள் நால்வருமே சிறப்பு மிக்கவர்கள். தீயவை என்பதே இல்லாதவர்கள். இராமர் என்றால் என்றும் தர்மம் காப்பவர், லக்ஷ்மணர் என்றால் எப்போதும் கைங்கர்யம் செய்பவர். பரதன் என்றால் எப்போதும் சமர்ப்பணம் செய்பவர், சத்ருக்னன் என்றால் என்றும் பாகவத சேவை செய்பவர்.

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை. கொடுத்த வாக்கை எப்படியாவது தர்ம வழியில் நின்று உயிர் கொடுத்தாவது காக்க வேண்டும். அண்ணன் தம்பி விட்டுக் கொடுத்தல் வேண்டும். நாட்டு மக்களின் நலனில் அக்கறை கொள்ளல் வேண்டும். தர்மத்தைக் காக்க வேண்டும். குலம் காணாது எல்லோரிடத்திலும் நட்பு கொள்ளல் வேண்டும். இனிமையாகப் பேச வேண்டும். முடிந்தவரை நல்லதை பல முறை செய்திடல் வேண்டும். அகங்காரம் கூடாது. பகவானிடம் சரணாகதி செய்தல்,பகவத் மற்றும் பாகவத கைங்கர்யம் செய்தல் வேண்டும். வீரனாக இருக்க வேண்டும். குலப் பெருமையை நாட்ட வேண்டும். பண்புள்ளவனாக வாழ வேண்டும். பக்தி வேண்டும் என்று இராமாயணம் கூறும் பல நற்பண்புகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

**– திருமதி ராஜலக்ஷ்மி,**
**கேரளா, 9946128102**







# திருவேங்கடவனை தரிசித்த அன்னமய்யா



தெலுங்கு மூலம் : டாக்டர் ஆ.விபீஷ்ண சர்மா, திருப்பதி
தமிழாக்கம் : திரு. வி.பரந்தாமன், திருப்பதி.

பக்தி என்பது மிகப் பெரிய இரத்தினம் போன்றது. அந்த பக்தியின் மூலம் இறைவனின் தரிசனத்திற்காகவும், அருளிற்காகவும் பக்தர்கள் அணுகும் முறை வேறுபட்டதாக இருக்கும். ஜபித்தல் சிலருக்கு வெற்றி தரும். வேறு சிலருக்கு வனவாசம், தனம், யோகம் ஆகியவை வழிகாட்டியாக அமையும். ஆனால், கலியுகத்தில் நாமபாராயணம் மற்றும் தியானமே இறையருளுக்கு எளிய பாதை என்கின்றனர் ஆன்றோர். அதைவிட இசையே சிறந்த வழியாகும். வைகுண்ட வாசத்தை விட இசை உலகமே தனக்கு விருப்பமானது என்கிறார் வைகுந்த நாதன். ஆதலால்தான் இசைக் கலைஞர்களும் பக்தி சங்கீர்த்தனை வழியையே தேர்ந்தெடுக்கின்றனர்.

புராணங்களை ஆராய்ந்தால் துருவனுக்கு வாசுதேவ நாமஸ்மரணையால் மகாவிஷ்ணுவின் தரிசனம் கிட்டியது. அதேபோன்று பிரகலாதனுக்கு நரசிம்மரின் தரிசனம் கிட்டியது. இருவருமே சிறுவர்கள்தான். அன்னமய்யா திருவேங்கடமுடையானின் நாம மந்திரத்தில் சிறு வயதிலேயே சரண் புகுந்தார். இதனை அன்னமய்யா "அன்னி மந்த்ர முலிந்தே யாவஹிம்மசேனு" எனும் கீர்த்தனையில் அனைத்து தேவதைகளின் சக்தி ஸ்ரீநிவாசனே என்கிறார். சிறு வயதிலேயே திருவேங்கடவனின் நாமத்தைப் பாடும் மன முதிர்ச்சி அவரின் குழந்தைப் பருவ பக்தியைத் தெளிவாகக் காட்டுகிறது. அன்னமய்யா ஸ்ரீநிவாசனை எப்போது தரிசித்தார் என்பதற்கு தாமிரபலாக கீர்த்தனையின் முதல் செப்புத்தகடு கீழ்காணும்படி கூறுகிறது.

"...தாள்ளபாக அன்னமாசார்யுலு அவதரின்சின பதுநாரு
யேண்ட்லகு திருவேங்கடநாதுண்டு பிரத்யகூஷ மைதேனு..."

16 வயதிலேயே அன்னமய்யாவிற்கு திருவேங்கடவன் தரிசனம் அளித்ததாக இந்தச் செப்புத் தகட்டில் கூறப்பட்டுள்ளது. இதன்படி வரலாற்று ஆய்வாளர்கள் அன்னமய்யா தொடர் ஆண்டு 1408 ஆம் ஆண்டு பிறந்து 16வது வயதில் ஸ்வாமியைத் தரிசித்ததாக ஒப்புக்கொள்கின்றனர்.

உபசாரங்களில் சோடஷ எண்ணிக்கை முக்கியமானதாகும். மனித பருவ நிலையில் 16வது வயது மிக முக்கியமானதாகும். சடங்குகளிலும் 16 சடங்குகள் உள்ளன. சம்பாவனைகளில் 16,116,1116க்கு உரிய மரியாதை அளிக்கப்படுகிறது. வாழ்க்கையிலும் அன்னமய்யாவிற்கு 16வது வயதில் திருவேங்கடமுடையானின் திவ்ய தரிசனம் கிட்டியது விசேஷமானதல்லவா! அன்னமய்யாவின் கீர்த்தனைகளை ஆராய்ந்தால் இசைக்கலைஞனுக்கு திருவேங்கடவன் எந்தெந்த நிலைகளில் தரிசனம் அளித்து உள்ளார் என்பதை அறிய முடிகிறது.

## கனவில் தரிசனம்

ஆகமங்கள் கனவில் இறைவனை தரிசித்தால் சிறந்த பக்தி ஏற்படும் எனக் கூறுகின்றன. முதலாழ்வார்களுக்கு ஸ்வாமி தரிசனமளித்தபோது "திருக் கண்டேன்" என்று முதலில் தாயாரை தரிசித்ததாகவே பேயாழ்வார் கூறுகின்

றார். ஸ்ரீவைஷ்ணவர்களும் தாயாரைத் தரிசித்துப் பின்னர்தான் ஸ்வாமியைத் தரிசிப்பர். அதேபோன்று தான் அன்னமய்யா திருமலைக்கு நடந்து வரும் போது முழங்கால் மெட்டு அருகில் சோர்வுற்று மயங்கியபோது அலர்மேல் மங்கைத் தாயார் அங்கே தோன்றி அன்னமய்யாவிற்கு ஸ்வாமி பிரசாதம் அளித்து நடைபாதையில் கடைபிடிக்க வேண்டிய நியமனங்களைக் கூறியதாக அன்னமய்யா வரலாறு கூறுகின்றது. அப்போது அன்னமய்யா "வேங்கடேஸ்வர சதகம்" பாடினாராம். அதில் ஸ்வாமியின் லீலா விசேஷங்களை வர்ணித்து அவரைக் கனவில் தரிசித்ததாகக் கூறுகின்றார்.

*"இப்புடு டிடு கலகண்டி நெல்லலோகமுலுகு*
*நப்பண்டகு திருவேங்கடாத்ரீசு கண்டி..."*

எனும் கீர்த்தனையில் சேஷாசல சிகரத்தையும், கனகரத்தினம், கனகாம்பரம், சங்கு, சக்கரங்களை தரித்து கொண்டிருந்த திருவேங்கடவனை கனவில் கண்டேன் என்று கீர்த்தனையில் குறிப்பிடுகின்றார். இதன் மூலம் திருவேங்கடவனின் தரிசனம் அன்னமய்யாவிற்கு கனவிலே கிட்டியதற்கான ஆதாரமாக இது விளங்குகிறது என்பதை அறிய முடிகிறது.

### அர்ச்சாவதார தரிசனம்

அன்னமய்யா திருமலைக்குச் சென்று பக்தர்களிடம் திருவேங்கடமுடையானின் அற்புதமான வைபவங்களைக் கேட்டு ஆனந்தம் அடைவார். சுயம்பு வடிவமான திருவேங்கடமுடையானின் சௌந்தர்ய அழகு வடிவினை வர்ணித்து அன்னமய்யா பல கீர்த்தனைகளைப் பாடியுள்ளார். அவற்றில் வரத ஹஸ்த வர்ணனை, திருவேங்கடவனின் திருப்பாதங்கள் பற்றிய வர்ணனை முக்கியமானவைகள் ஆகும்.

*"இந்தரிகிந பயம்பு லிச்சுசேயி கந்துவகு மன்சி பங்காருசேயி..."*
*"பிரம்ம கடிகின பாதமு பிரம்மமு தா நீ பாதமு..."*

அர்ச்சாவதார தரிசனமே அன்றி உத்ஸவ மூர்த்திகளுக்கு நடைபெறும் நித்ய, வார, மாத உத்ஸவ வர்ணனைகளிலும் ஸ்வாமி தரிசனம் பற்றி கூறுகின்றார். ஆலயத்தில் நடைபெறுகின்ற அபிஷேகம், கல்யாண உத்ஸவம், பிரம்ம உத்ஸவங்களிலும் திருமலையப்ப ஸ்வாமியின் தரிசனம் அன்னமய்யாவிற்கு கிட்டியது. *"ஒகபரினோகபரி"* எனும் கீர்த்தனையில் அன்னமய்யாவின் தரிசன அனுபூதி படிப்போருக்கும், பாடுவோருக்கும், கேட்போருக்கும் திவ்ய அனுபவம் கிட்டும். இது அர்ச்சா மூர்த்தி தரிசன பாக்கியம் கிடைப்பதற்கான உதாரணமாகவே கொள்ளலாம்.

*"துருவவரதா ஸம்ஸ்துத வரதா..."* எனும் கீர்த்தனையில் கரிராஜன், காகாசுரன், விபீஷணன், அக்ரூரன், அம்பரீஷன், திரௌபதி, அர்ஜுனன் எனும் பெயர்களைக் கூறி "பிரகலாத வரதா" என்பதிலிருந்து பக்திக் கொடியை உயர்த்துவதாகக் கொள்ளலாம். ஸ்ரீஹரியின் நந்தகத்தின் அம்சமான அன்னமய்யாவின் கீர்த்தனைகளைப் பாடுவதினால் திருவேங்கடவனின் திருவருள் எளிமையாகக் கிட்டும் என்பதை நாம் உணரலாம்.

## ஸ்ரீகோதண்ட ராமஸ்வாமி, சந்திரிகிரி



**திருப்பதி மாவட்டம், சந்திரகிரியில் ஸ்ரீராமர் ஸ்ரீகோதண்டராமஸ்வாமியாக கொலுவீற்று இருக்கின்றார். சந்திரகிரி விஜய நகர அரசிற்கு உட்பட்டிருந்த இக்கோட்டைக்கு அடிக்கடி விஜய நகர சக்ரவர்த்திகள் வருவர். அவர்கள் இங்கிருந்துதான் திருமலைக்குச் சென்று ஸ்வாமியைத் தரிசிப்பர். 16ஆம் நூற்றாண்டில் விஜய நகர சக்ரவர்த்திகளின் அதிகாரி ஒரு நாள் கோட்டைக்கு அருகில் ஓய்வில் இருந்தபோது கனவில் ஸ்வாமி தோன்றி, தாம் இங்கு மறைந்திருப்பதாகக் கூற, அவரும் இங்கு ஆலயம் அமைத்து பிரதிஷ்டை செய்தாராம். இங்கு ஸ்ரீராமர் ஸ்ரீசீதா தேவியுடன் தம் சகோதரர்களோடு தரிசனம் அளிக்கின்றார். ஒரே பீடத்தில் சீதாதேவி ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி, லக்ஷ்மணர், பரதன், சத்ருக்கனனுடன் இருபுறமும் அனுமனும் கருடனும் வீற்றிருக்கின்றனர். ஒரே பீடத்தில் அமைந்திருப்பது சிறப்பு. திருப்பதியிலிருந்து சுமார் 13 கி.மீ. தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.**



108 திவ்ய தேச வைபவம் 83

# திருவெஃகா (சின்ன காஞ்சிபுரம்)

– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

பிரமன் சரஸ்வதி தேவியிடம், "திருமகளைக் காட்டிலும் நீ நிலையில் தாழ்ந்தவள், பகவானின் திருவடியில் இருந்து பெருகிய கங்கையைக் காட்டிலும் பெருமையில் குறைந்தவள்" என்று சொன்னதாகவும், கோபம் கொண்ட கலைமகள், பிரமனைப் பிரிந்து தவம் செய்யத் தொடங்கித் தான் நிகழ்த்தும் அசுவமேதயாகத்தில் உடன் இருந்து நடத்த வேண்டும் என்ற பிரமனின் விருப்பத்தையும் புறக்கணித்து, தான் பெருவெள்ளம் மிக்க நதியாய் மாறி, யாகத்தை அழிக்கத் தொடங்கியதாகவும், உடனே, பிரமன் பகவானை அடைக்கலமாக அடைய எம்பெருமான் காஞ்சி நகரின் மேற்கே, "கஜகிரி" என்ற இடத்தில் அணையாகத் தோன்றி, வெள் ளத்தைத் தடுத்தாரென்றும் பிரம்மாண்ட புராணம் சொல்கிறது.

அந்த இடத்தில், "சயநேசன்" என்ற பெயர் பெருமானுக்கு உண்டாயிற்று. அந்த இடத்திற்குப் "பள்ளிகொண்டை" என்ற பெயர் ஏற்பட்டது. உடன் கலைமகள், தன் வடிவை மறைத்துக் கொண்டு காஞ்சி நகரின் கிழக்குப் பகுதியில் மீண்டும் பெருகினாள். மீண்டும் அவ்விடத்தில் எம்பெருமான் அணையாக உருக்கொண்டு கலைமகளின் நதி வேகத்தைத் தடுத்தான். அவ்விடத்தில் எம்பெருமா னுக்கு "பிரளயரோதகன்" என்ற பெயரும், அந்த இடத்திற்குத் "திருப்பாற்கடல்" என்ற பெயரும் ஏற்பட்டன.

பிரமனின் யாகத்தை எப்படியும் பகவான் காப்பாற்றியே தீருவான் என்று உணர்ந்த கலைமகள், தன் பிழை உணர்ந்து, எம்பெருமானை நேரில் கண்டு வணங்கி, போற்ற விரும்பி, இவ் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்று மனதில் எம்பெருமானை வேண்டி, யாகசாலையில் அக்னி குண்டத்தில் இருந்து அவள் மீண்டும் பெருகத் தொடங்கவே, அப்போது பிரம்மா வேண்ட, ஒப்பற்ற அணையாகத் தோன்றினான் எம்பெருமான். கலைமகள் தன் ஆற்று வடிவை மறைத்துத் தன் உண்மை வடிவில் தோன்றி, எம்பெருமானை சேவித்துப் போற்றத் தொடங்கினாள்.

"நான் மனதில் விரும்பிய வண்ணம், தாங்கள் இங்கே சேவை சாதித்தால் "யதோக்தகாரி" என்ற திருப்பெயருடன் இங்கேயே அர்ச்சை வடிவில் எப்போதும் விளங்க வேண்டும்" என்று வேண்ட, இவ்விடமும் திருவெஃகா எனும் திவ்ய தேசம் ஆயிற்று. எம்பெருமானும் கலைமகளுக்கு வேகவதி என்ற பெயரை அருளி, அவள் யாகசாலையில் தோன்றிய இடத்திற்கு "குண்ட தீர்த்தம்" என்று பெயர் கொடுத்து காஞ்சியை அடைந்து அவள் புனிதம் பெற்ற காரணத்தால், கங்கையைக் காட்டிலும் அவள் உயர்ந்தவள் என்ற உயர்வையும் கொடுத்து, அவளைப் பிரமனிடம் சேர்ப்பித்து, யாகத்தை நிறைவேற்றி அருள் செய்தார்.

**சிறப்புகள் :**

திருமழிசை ஆழ்வாரால் ஏற்றம் பெருமை இதோ: சீடரான கணிகண்ணன், கவிதைகள் இயற்றும் ஆற்றல் பெற்று, அவ்வூரில் பகவானுக்கு



பணி செய்யும் ஒரு மூதாட்டி விரும்பிய வண்ணம், தடையில்லாமல் திருப்பணி செய்ய விரும்பிய அவள் விருப்பத்தை நிறைவேற்றும் முறையில் எம்பெருமானைப் பாடி அவளுக்கு இளமையை வாங்கிக் கொடுத்தான். இதை அறிந்த பல்லவ வேந்தன், தனக்கும் இளமை கிடைக்கும்படி கவிபாட வேண்டிய போது, கணி கண்ணன் அதற்கு இணங்காமையால் மன்னன் அவனை நாடு கடத்தினான். அதனை அறிந்த திருமழிசையாழ்வார்,

*"கணிகண்ணன் போகின்றான், காமருபூங்கச்சி*
*மணிவண்ணா! நீ கிடக்க வேண்டா-துணிவுடைய*
*செந்நாப் புலவனும் போகின்றேன், நீயும் உன்றன்*
*பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்"*

என்று அன்பினால் பகவானுக்கு ஆணை இடவே, இத்தலத்து மூர்த்தியும், பாம்புப் படுக்கையைச் சுருட்டிக் கொண்டு ஆழ்வாருக்குப் பின்னே புறப்பட, அவ்வாறு அவர்கள் சென்று, ஓர் இரவில் தங்கிய இருப்பிடம் ஓர்+இருக்கை = ஓரிரவு இருக்கை என்று பெயர் பெற்று, இன்று ஓரிக்கை என்று வழங்கப்பெற்று வருகின்றது. பிழையுணர்ந்த மன்னன், பெருமாளைத் தேடிச் சென்று பிழை பொறுத்துத் திரும்புமாறு வேண்டியதால், ஆழ்வார்

*"கணிகண்ணன் போக்கு ஒழிந்தான், காமருபூங்கச்சி*
*மணிவண்ணா! நீ கிடக்க வேண்டும் - துணிவுடைய*
*செந்நாப் புலவனும் போக்கு ஒழிந்தேன், நீயும் உன்றன்*
*பைந்நாகப் பாய் விரித்துக் கொள்"*

என்று பாடினார்.

எம்பெருமான் மீண்டும் இத்தலத்தை அடைந்து, கிடந்த கோலத்தில் சேவை சாதிக்கிறான். பெரியவாச்சான் பிள்ளை, "ஆச்ரிதன் (அடியவன்) போ! என்ன, படுக்கையைச் சுருட்டிக் கொண்டு அவன் பின்னே போய், கிட என்ன, காற் கடை தலை மாடாகக் கிடந்தான்" என்று வியாக்யானம் செய்திருக்கிறார்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | யதோக்தகாரி, சொன்ன வண்ணம் செய்த பெருமாள், வேகாசேது (மேற்கு நோக்கிய கிடந்த திருக் கோலம்) |
| தாயார் | : | கோமளவல்லி நாச்சியார். |
| தீர்த்தம் | : | பொய்கைப் புஷ்கரணி. |
| விமானம் | : | வேத ஸார விமானம். |
| ப்ரத்யக்ஷம் | : | பிரமன், பொய்கை ஆழ்வார், திருமழிசை ஆழ்வார், கணி கண்ணன். |
| ஆகமம் | : | பாஞ்சராத்ரம். |
| மங்களாசாஸனம் | : | பொய்கை ஆழ்வார்,பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார் திருமங்கை ஆழ்வார். |

**விசேஷம் :**

நம்மாழ்வார் அருளிய "நின்றவாறும் இருந்தவாறும், கிடந்தவாறும்" என்ற தொடர்களில் "கிடந்தவாறும்" என்ற தொடருக்கு, "திருவெஃகாவிலே கிடந்த படியும் என்று, இத்தலத்துப் பெருமானின் கிடந்த கோலத்தைப் பொருளாக நம்பிள்ளை கொண்டுள்ளார்.

இத்தலத்து எம்பெருமான், காஞ்சி மாநகரத்தின் பாக்கியமே உருக் கொண்டார் போன்றவன் என்ற பொருளில் "காஞ்சி பாக்யம்" என்று ஸ்வாமி தேசிகன் அருள்கிறார். ஸ்வாமி தேசிகன் அவதரித்த திவ்ய தேசம்.

**த்யானச்லோகம் :**

*"நேயமார் மழிசை யாழ்வார் நிகர் இலாக் கணிகண்ணன் தான் காயும்*
*அவ்வளவன் சொல்லால் கச்சி விட்டு ஏகுகின்றான்*
*மாயவா! யானும் சொல்வேன், நீயும் வா என்னச் சேடப்*
*பாயலைச் சுருட்டி அன்று சென்றருள் பரமன் வாழி"*

– வரதராசபாகவதம்

*தேவ: கோமள நாயிகா ப்ரியதம: க்யாதோ யதோக் தார்த்த க்ருத்*
*ஸ்ரீமாந் தத்ரஹி வேதஸார விஹிதே ச்லாக்யே விமாநே வரே*
*ப்ரத்யக்திக் வதந: த்வநந்த சயனஸ் தீர்த்தம் தடாகாஹ்வயம்*
*பச்யந்நேவ தடாக ஸம்பவ மஹாபக்த ப்ரஸந்நோவதாத்*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

*"வெஃகனைக் கிடந்தது என்ன நீர்மையே!"*

– திருச்சந்த பா.63

திருமழிசையாழ்வார் அருளிய வண்ணம், "கிருஷ்ண அவதாரத்தில் கண்ணனிடம் விளங்கிய எளிமைப் பண்பு, இத்தலத்து எம்பெருமானிடம் காணப்பெற்றதால், இத் தலத்து எம்பெருமானுக்கு "சொன்னவண்ணம் செய்த பெருமாள்" என்று பெயர் ஏற்பட்டது. மேலும், வடமொழி யில் யதோக்தகாரி" என்று வேறு திருப்பெயரும் இத்தலத் தின் எம்பெருமானுக்கு உண்டு.

பாசுரம்,

*வேங்கடமும், விண்ணகரும், வெஃகாவும் அஃகாத*
*பூங்கிடங்கின் நீள் கோவல் பொன்னகரும்-நான்கு இடத்தும்*
*நின்றான், இருந்தான், கிடந்தான், நடந்தானே*
*என்றால் கெடுமாம் இடர்"* – பொய்கையாழ்வார்.

*"பொருப்பு இடையே நின்றும், புனல் குளித்தும் ஐந்து*
*நெருப்பு இடையே நிற்கவும் நீர் வேண்டா-விருப்புடைய*
*வெஃகாவே சேர்ந்தானை, மெய்ம்மலர் தூய்க் கை தொழுதால்*
*அஃகாவே தீவினைகள் ஆய்ந்து"*

– பேயாழ்வார்

*"நானிலம் வாய்க்கொண்டு, நன்னீர் அறமென்று கோதுகொண்ட*
*வேனிலஞ்செல்வன், சுவைத்து உமிழ் பாலை கடந்த பொன்னே!*
*கால்நிலம் தோய்ந்து விண்ணோர் தொழும் கண்ணன்*
*வெஃகாவுது அம்பூந்*
*தேன் இளம்சோலை அப்பாலது, எப்பாலைக்கும் சேமத்ததே"*

– திருமங்கையாழ்வார்

*கூந்தலார் மகிழ்கோவலனாய், வெண்ணெய்*
*மாந்தமுந்தையில் கண்டு மகிழ்ந்து போய்*
*பாந்தள் பாழியில் பள்ளி விரும்பிய*
*வேந்தனைச் சென்று காண்டும்வெஃகாவுளே"*

– நம்மாழ்வார்

*உரைகலந்த நூல் எல்லாம் ஓதி*
*உணர்ந்தாலும்*
*பிரை கலந்த பால்போல் பிறிதாம் - தரையில்*
*திருவெஃகா மாயனுக்கே சீர் உறவாம்*
*தங்கள்*
*உருவெஃகா உள்ளத்தினோர்க்கு*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்**

*781. ஓம் துர்ஜய: நம:*

யாராலும் வசப்படுத்த முடியாதவன்.

*ஓம் க்யாதிபரா: நம:*

ப்ருகு முனிவருக்கு கியாதியிடம் வேறொரு திருமேனியுடன் அவதரித்தவள்.

*782. ஓம் துரதிக்ரம: நம:*

எல்லாருக்கும் புகலிடமான கடக்க இயலாத திருவடிகளை உடையவன்.

*ஓம் ஸ்தவ்யா: நம:*

துதிக்க எளிதானவள்.

*783. ஓம் துர்லப: நம:*

புலன்களை வெல்லாதவர்களால் அடைய இயலாதவன்.

*ஓம் வ்ருஷ்டி: நம:*

தராதரம் பாராமல் அடியவர்களுக்குத் தேவையானதை வர்ஷிப்பவள்.

*784. ஓம் துர்கம: நம:*

மிகவும் சிரமப்பட்டு அடையத்தக்கவன்.

*ஓம் த்ரிகாலகா: நம:*

முக்காலத்திலும் உள்ள எல்லாப் பொருள்களிலும் வியாபித்து இருப்பவள்.

*785. ஓம் துர்க: நம:*

நம் அவித்யை முதலியவை ஜீவனை கோட்டை போல சூழ்ந்திருப்பதால் அவனிடம் பிரவேசிக்க இயலாதவன்.

*ஓம் ஸம்போதிநீ: நம:*

பகவானுடன் சேர்ந்து அநுக்ரஹ சங்கல்பம் செய்பவள்.

786. ஓம் துராவாஸ: நம:

எட்டாத இடத்தில் இருப்பவன்.

ஓம் சப்த பூர்ணா: நம:

எல்லா சப்தங்களுக்கும் பகவானைப் போலவே பொருளாக உள்ளவள்.

787. ஓம் துராரிஹா: நம:

புத்தர் அவதாரத்தில் கெட்ட வழியில் செல்பவர் களைப் பல உபாயங்களால் தடுத்தவன்.

ஓம் விஜயா: நம:

நினைத்ததை செய்வதில் தோல்வியில்லாதவள்.

788. ஓம் ஸுபாங்க: நம:

அழகிய திருமேனி உள்ளவன்.

ஓம் அம்சுமதீ: நம:

எங்கும் பரவும் பிரகாசமான ஞானத்தை உடைய வள்.

789. ஓம் லோகஸாரங்க: நம:

உலகத்தார் புகழ போக மோக்ஷமார்க்கம் உபதேசித்தவன்.

ஓம் கலா: நம:

எல்லாவற்றையும் செய்யும் சக்தி உள்ளவள்.

790. ஓம் ஸுதந்து: நம:

அசுரரை வசீகரிக்கும் எழில் வலை உடையவன்.

ஓம் சிவா: நம:

அமங்களத்தை அழிப்பவள்.

ஸ்ரீமதே கோமளவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீயதோக்தகாரி (சொன்னவண்ணம் செய்த பெருமாள்) பர ப்ரம்மணே நம:

**குறிப்பு :**

காஞ்சி வரதர் சந்நிதியிலிருந்து ஒரு கி.மீ. தொலைவில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

திவ்ய தேச யாத்திரை தொடரும்...

## ஸ்ரீகோதண்டராமஸ்வாமி திருக்கோயில், திருப்பதி

**திருப்பதி நகரின் மையத்தில் அமைந்துள்ள ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி திருக்கோயிலில் ஸ்ரீகோதண்ட ராமர் சீதை மற்றும் லக்ஷ்மணர் ஆகியோர் முதன்மை தெய்வங்களாக உள்ளனர். திரேதா யுகத்தில், ஸ்ரீராமர், சீதா தேவி மற்றும் லக்ஷ்மணர் ஆகியோர் இலங்கையிலிருந்து அயோத்திக்குத் திரும்பும் வழியில் இங்கு ஓய்வெடுத்ததாக வராஹ புராணம் கூறுகின்றது.**

**பதினோராம் நூற்றாண்டில் சோழர்களால் இந்தப் பகுதியில் இராமபிரான் எழுந்தருளியதை நினைவுறுத்தும் வகையில் இத்திருக்கோயில் கட்டப்பட்டது. ஜாம்பவான் பிரதிஷ்டை செய்த ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி நல்ல ஆரோக்கியம், செல்வம், மகிழ்ச்சி, அமைதி ஆகியவற்றை அருளுகிறார். அனைத்து செல்வங்களை யும் அடைய அனைவரும் அவர் முன் சிரம் தாழ்த்தி வணங்கு வோம்.**

**வருடந்தோறும் ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமிக்கு ஸ்ரீராமநவமியை முன்னிட்டு பிரம்மோத்ஸவம் மிகவும் சிறப்பாக திருமலை திருப்பதி தேவஸ்தானம் ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றது. இந்த பிரம்மோத்ஸவத்தைத் தொடர்ந்து சீதாராம திருக்கல்யாணம், ஸ்ரீராமபட்டாபிஷேகம், வஸந்தோத்ஸவம் மற்றும் தெப்போத்ஸவம் ஆகியவையும் நடைபெறும். இவற்றை காணக் கண் கோடி வேண்டும் என்று எண்ணத் தோன்றும்.**







## ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# மாறனேரி நம்பிகள்

– ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

ஆளவந்தார் சீடர்களில் ஒருவராய், பஞ்சம வர்ணத்தில், பாண்டிய தேசத்தில், பராந்தகம் என்னும் கிராமத்தில் ஆனி மாதம் ஆயில்யம் நக்ஷத்திரத்தில் அவதரித்தவர் மாறனேரி நம்பியாவர். ஞானம், பக்தி, வைராக்யத்துக்கு ஒரு கடலாயிருப்பவர். ஆசார்யர்களுக்கு இனியவர்.

ஆனிதனில் ஆயில்யம் அவதரித்தான் வாழியே
ஆளவந்தார் திருவடிகள் ஆச்ரயித்தோன் வாழியே
மாநிலம் எதிராசர் மனம் வாழ்வித்தோன் வாழியே
மதிளரங்கநகரமதில் வாழ்ந்தருள்வோன் வாழியே
தேனமரும் தென்மொழியின் சிறப்பறிந்தோன் வாழியே
திகழ் ஞானபக்திகளால் சேர்ந்திருப்போன் வாழியே
வானவரில் பொருவரிங்கு மகிழ்ந்து வந்தோன் வாழியே
மாறனேரி நம்பி இணை மலரடிகள் வாழியே.

### பதவுரை

ஆனிதனில் – ஆனி மாதத்தில், ஆயில்யம் – ஆயில்ய நக்ஷத்ரத்தில், அவதரித்தான் – அவதரித்தவர் மாறனேரி நம்பிகள், வாழியே – வாழ வேண்டும். ஆளவந்தார் – யமுனாசார்யர் என்னும் ஆளவந்தாருடைய, திருவடிகள் – திருவடிகளை, ஆச்ரயித்தோன் – தஞ்சமாகப் பற்றினவர், மாநிலம் – பூமியில், எதிராசர் – இராமாநுசர், மனம் – மனத்தை, வாழ்வித்தோன் – வாழ்வித்தவர். மதிளரங்கநகரமதில் – மதிளால் சூழப்பட்ட, திருவரங்கத்தில், வாழ்ந்தருள்வோன் – வாழ்கின்றவர். தேனமரும் – அழகு நிறைந்த, தென்மொழியின் – தமிழ் மொழியின், சிறப்பறிந்தோன் – பெருமை அறிந்தவர். திகழ் ஞான பக்திகளால் திகழ்கின்ற ஞானம், பக்திகளால், சேர்ந்திருப்போன் – சிறந்து விளங்குபவர். வானவரில் – நித்ய ஸூரிகளில், பொருவர் – ஒப்பானவர், இங்கு மகிழ்ந்து வந்தோன் – இங்கு மகிழ்ச்சியோடு வந்து அவதரித்தவர். மாறனேரி நம்பி – மாறனேரி நம்பி என்ற ஆசார்யர், இணை மலரடிகள் – இரண்டு தாமரை போன்ற திருவடிகள், வாழியே – வாழ வேண்டும்.

### சிறப்புரை

(ஆனிதனில் ஆயில்யம் அவதரித்தான் வாழியே) தமிழ் மாத வரிசையில் மூன்றாவது மாதம் ஆனி மாதமாகும். மிதுன மாதம் என்றும், ஜ்யேஷ்ட மாதம் என்றும் அழைக்கப் படுகிறது. ஆழ்வார்களில் பெரியாழ்வார் பிறந்த மாதம், நக்ஷத்ர வரிசையில் ஆயில்யம் ஒன்பதாவது நக்ஷத்ரமாகும். வடமொழியில் ஆச்ரேஷா என வழங்கப்படும். **“ஆச்ரேஷா நக்ஷத்ரம் ஸர்ப்பா தேவதா:”** என்பது வேத வாக்யம். மகாவிஷ்ணுவின் படுக்கையான ஆதிசேஷனைக் குறிக்கும். இராம அவதாரத்தில் ஆதிசேஷன் லக்ஷ்மணனாக அவதரித்தான். இத்தகைய பெருமை பெற்ற இம்மாதத்தில் ஆயில்யம் நக்ஷத்திரத்தில் அவதரித்தவர் மாறனேரி நம்பிகள்.

(ஆளவந்தார் திருவடிகள் ஆச்ரயித்தோன்) ஆளவந்தார் சீடர்கள் இருபத்திருவரில் பதின்மூன்றாமவர் மாறனேரி நம்பிகளாவர் என்று பெரிய திருமுடி அடைவு கூறும். அபிமானத்துக்குக் காரணமான பிறவி, தொழில் முதலானவைகள் இன்றியே ஆளவந்தார் திருவடியைத் தஞ்சமாகப் பற்றினவர் (ஸ்ரீ வ.பூ. சூ.234). ஒரு நாள் ஆளவந்தார் தமது கோஷ்டியுடன் யாத்திரை செய்யும்போது வழியில் வயலைச் சீர்திருத்திக்

கொண்டிருந்தார் நம்பிகள். பசி எடுத்ததனால் வயலிலுள்ள சேறும் நீரும் கலந்து ஒரு பிடி எடுத்து எம்பெருமானை நினைத்துக் கொண்டு உட்கொண்டார். இதனைக் கண்ட ஆளவந்தார் ஆச்சர்யப் பட்டு தம் சீடர்களிடம் "ஸர்வேச்வரன் வயிற்றை நிரப்ப அன்னம், நீர் முதலான வற்றை வெகுவாய் படைத்திருக்கிறான். இந்த வயலருகே உள்ள சேற்றை உண்பானென்" என்று நம்பிகளைக் கேட்டு வரச் சொன்னார்.

சீடர்களும் சென்று அவரிடம் கேட்க, அவரும் "ஸ்வாமிகாள் அடியேன் இம்மண்ணுக்கும் அம்மண்ணுக்கும் வேறுபாடு அறியேன்'' என்று பதில் சொன்னார். இதனை அறிந்த ஆளவந்தார் பிறக்கும்போதே சடமாகிற வாயுவை கோபித்த மாறனாகிய ஸ்ரீசடகோபரோ இவர் என்று இவருடைய ஞானம் மிகுதிக்கு ஆச்சர்யப்பட்டு இவருக்கு இன்று முதல் மாறநேர் நம்பி என்று பெயரிட்டார்.

தம்மோடு வரும்படி அழைக்க, அவரும் தாம் ஐந்தாம் வருணத்தவனாதலால் கிட்டும் தகுதி இல்லை என்றார். அதற்கு ஆளவந்தார் ப்ரஹ்ம ஞானிகளுக்கு வர்ண பேதம் கிடையாது என்று சொல்லி அழைத்துச் சென்றார். இதனால் ஆளவந்தார் திருவடியைப் பற்றினது சொன்னபடி.

(மாநிலம் எதிராசர் மனம் வாழ்வித்தோன்) பூமியில் எதிராசர் மனம் மகிழும்படி செய்தவர் மாறனேரி நம்பி. அறிவிற் சிறந்த மாறனேரி நம்பியைப் பார்த்து ஆளவந்தார் தாம் அனுபவித்து வரும் ராஜபிளவை என்னும் நோயை நம்பி வேண்டியபடியே ஏற்றுக் கொள்ளச் சொன்னார்."பலன் கொடுக்கத் தொடங்கிய ப்ராரப்த கருமம் பெரியவர்களுக்கும் தவிர்க்க முடியாது. இந்தப் பெரிய நோய் என்னால் நீண்ட காலம் அனுபவிக்கப் பட்டது. நீ விரும்பியபடி இந்த நோயைச் சிறிது காலம் அநுபவிப்பாயாக'' என்று கூறினார்.

நம்பியைப் பாதுகாக்க பெரிய நம்பியை நியமித்துச் செய்ய வேண்டியதையெல்லாம் செய்து முடித்தார் ஆளவந்தார். ஆசார்யரான ஆளவந்தார் பிரசாதமாகப் பெற்ற நம்பி தம்முடைய இறுதிக் காலத்தில் ஆளவந்தார் உகந்த இந்த சரீரத்தை நாய்க்கு இடுவதுபோல அவைஷ்ணவர்களான உறவினர்களிடம் இறுதிச் சடங்கு செய்யும்படி விடாமலிருக்க வேண்டினார். இவர் பரமபதித்தவுடன் பெரிய நம்பி தாமே இவருக்கு ப்ரஹ்ம மேத ஸம்ஸ்காரம் செய்தார். "பெரிய நம்பி மாறனேரி நம்பிக்கு புரோடசத்தை நாய்க்கிடாதே கொள்ளும் என்று அவர் அருளிச் செய்து போந்தபடி புரோடாசமாக நினைத்துச் செய்த புத்ரக்ருத்யமும்'' என்று ஆசார்ய இதயத்தில் (சூ.*85*) அருளியது காண்க. இதைக்கேட்டு இராமாநுசரும் பெரிய நம்பி திருமாளிகைக்குச் சென்று தண்டன் சமர்ப்பித்து "அடியேன் ஸம்ஸாரம் சிலுகிடாதபடி ஒரு வழியிலே வரம்பு கட்ட, தேவரீர் ஒரு வழியிலே பிரித்தருளா நின்றதே. இது தகுமோ?'' என்று விண்ணப்பம் செய்தார். அதனால் மனம் கலங்கினார்.

உடனே பெரிய நம்பி, "வாரீர், எதிராஜரே, ஸ்ரீராமன் ஜடாயுவுக்கு ஸம்ஸ்காரம் செய்தார். தருமபுத்ரர் விதுரருக்கு ஸம்ஸ்காரம் செய்தார். ஜடாயுவையும், விதுரரையும் காட்டிலும் மாறனேரி நம்பி தாழ்ந்தவரல்லர். தருமபுத்ரரையும் ஸ்ரீராமனையும் காட்டிலும் நான் பெரியவனும் அல்லன். இத்தகைய அதிகாரிகள் விஷயத்திலாவது இதைச் செய்யாமல் போனால் நம்மாழ்வார் பாகவதர் பரமாக அருளிய "பயிலும் சுடரொளி", "நெடுமாற் கடிமை" என்னும் திருவாய் மொழிகள் (*3–7, 8–10*) "கடலோசை போலே பொருள் இல்லாமல் ஆகி விடவோ" என்று அருளினார்.

இதனைக் கேட்ட எதிராசர் மனம் மகிழ்ச்சி அடைந்தார். இதுபற்றியே "எதிராசர் மனம் வாழ்வித்தோன்" எனப்பட்டது. இந்த வரலாற்றை ஸ்ரீவசனபூஷணம் (சூ.*234*) வ்யாக்யானத் திலும், ஆசார்யஹ்ருதய சூ.*85* வ்யாக்யானத்திலும் காணலாம். "ஜாதியில் உயர்வு தாழ்வு பாராமல் ஞானப்பெருமையையே பார்த்து பாகவதர்களை ஆதரித்து பின் செல்ல வேணும் என்னும் விஷயம் பாகவதர்களின் அனுஷ்டான ஸித்தம் என்றதாயிற்று'' என்று திருநாராயணபுரத்து ஆயி வ்யாக்யானம் (சூ.*234*) காணத்தக்கது.

(மதிளரங்கநகரமதில் வாழ்ந்தருள்வோன்) ஏழு மதிள்கள் சூழ்ந்த திருவரங்கத்தில் யாமுனாசார்யரின் பெருமையைக் கேள்விப்பட்டு அவர் சீடரானார். பேரறிவாள ராய், ஆசார்யருக்கு சோம்பலின்றி நித்ய கைங்கர்யம் செய்பவராய், ஆசார்யர் திருமுன்பே நித்யவாஸம் செய்து வந்தார் என்று பிரபந்நாம்ருதம் கூறும். "ரங்கஸ்தல நிவாஸிநம்" என்று இவருடைய தனியனில் அருளிய படியே ஆளவந்தாரின்

சீடராய் திருவரங்கம் பெரிய கோயிலில் நித்ய வாஸம் செய்வர் என்றது காண்க.

(தேனமரும் தென் மொழியின் சிறப்பு அறிந்தோன்) தேன் அமரும் – சுவை நிரம்பிய. தென் மொழி – தெற்கு திசையில் வழங்கும் மொழி – தமிழ். "யாமுநாசார்ய ஸச் சிஷ்யம்" என்று தனியனில் அருளிய படியே ஆளவந்தாரின் சீடராய் அவர் திருவடிவாரத்தில் திவ்யப்ரபந்த கால க்ஷேபம் கேட்டவர். தென் மொழியான திவ்ய ப்ரபந்தத்தின் பொருள் அறிந்தவர். இது பற்றியே முதல் திருவந்தாதி முதல் பாசுரமான *''வையம் தகளியா''* என்ற பாசுரத்தை அனுபவித்து *''உடன்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்''* (திருவா. 1–1–6) என்ற பாசுரத் தொடரின் படியே மாறனேரி நம்பி எம்பெருமானை மறக்க உபாயம் இல்லையோ" என்றாராம் என்று பெரிய வாச்சான்பிள்ளை எடுத்துக் காட்டியது பற்றி தென்மொழி சிறப்பு அறிந்தோன் என்றபடி.

(திகழ் ஞான பக்திகளால் சேர்ந்திருப்போன்) ஒரு நாள் ஆளவந்தார் தமது கோஷ்டியுடன் யாத்திரை செய்யும்போது வழியில் வயலைச் சீர் திருத்திக் கொண்டிருந்தார் நம்பிகள். பசி எடுத்ததனால் வயலிலுள்ள சேறும் நீரும் கலந்து ஒரு பிடி எடுத்து எம்பெருமானை நினைத்துக் கொண்டு உட்கொண்டார்.

இதனைக் கண்ட ஆளவந்தார் ஆச்சர்யப்பட்டு தம் சீடர்களிடம் "ஸர்வேச்வரன் வயிற்றை நிரப்ப அன்னம், நீர் முதலானவற்றை வெகுவாய் படைத்திருக்கிறான். இந்த வயலருகே உள்ள சேற்றை உண்பானென்" என்று நம்பிகளைக் கேட்டு வரச் சொன்னார். அவர்கள் சென்று அவரிடம் கேட்க, அவரும் "ஸ்வாமிகாள் அடியேன் இம்மண்ணுக்கும் அம்மண்ணுக்கும் வேறுபாடு அறியேன்" என்று பதில் சொன்னார். இதனால் நம்பியின் ஞானப்பெருமையை அறியலாம். அவ்வாறே ஆளவந்தார் அனுபவித்து வந்த ராஜபிளவை நோயை அவர் அருளாகப் பெற்று அனுபவித்ததனால் ஆசார்ய பக்தி சிறந்து விளங்குவது காணலாம். இது பற்றியே ஞான பக்திகளால் சேர்ந்திருப்போன் என்றபடி. *''ஜ்ஞானபக்தியாதி ஸம்பந்நம் மாறநேரி குரும்பஜே''* என்று தனியனில் நம்பிகள் ஞானபக்தி முதலானவற்றால் பரிபூர்ணர் என்று அருளியது காணலாம்.

(வானவரில் பொருவரிங்கு மகிழ்ந்து வந்தோன்) வானவர் – நித்ய சூரிகள். பொருவர் – ஒப்பானவர். எம்பெருமான் ஸங்கல்பத்தால் நித்ய ஸூரிகளில் ஒருவர் இங்கு மகிழ்ந்து வந்து அவதரித்தார் என்க.

(மாறனேரி நம்பி இணை மலரடிகள் வாழியே) ஆளவந்தாரின் சீடரானவராய், பெரிய நம்பிகளின் அன்புக்கு பாத்ரமானவராய், எம்பெருமானாருக்கு உத்தாரகராய், பக்தி முதலானவற்றுக்குக் கடல் போன்றவருமான மாறனேரி நம்பியின் தாமரைக்கு ஒப்பான இரண்டு திருவடிகள் பல்லாண்டு வாழ வாழ்த்துவோமாக.


*வாழித்திருநாம உரை தொடரும்....*


## ஸ்ரீபட்டாபிராமர் ஸ்வாமி திருக்கோயில் வால்மீகி புரம் (வாயல்பாடு)

**தற்போதைய அன்னமய்யா மாவட்டத்தில் திருப்பதியில் இருந்து சுமார் 100 கி.மீ. தூரத்தில் வால்மீகி புரத்தில் ஸ்ரீராமபிரான் ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமியாக கொலு வீற்றிருக்கின்றார். பண்டைய காலத்தில் ஜாம்பவான் அயோத்தி சென்று ஸ்ரீராமபிரானைத் தரிசித்து விட்டு மீண்டும் திரும்பி வரும்போது ஒரு புற்றிலிருந்து ஒளி வருவதைக் கண்டு, புற்றினை அகற்றுகையில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி விக்ரகம் கிடைத்தது. அங்கேயே ஆலயம் அமைத்து ஸ்வாமியைப் பிரதிஷ்டை செய்தாராம்.**

**இவ்வாலயத்தில் ஸ்ரீராமர் சீதா தேவியோடு சகோதரர்களுடன் காட்சியளிக்கின்றார். வருடம் தோறும் நடைபெறும் பிரம்மோத்ஸவம் இம்மாதம் 12ஆம் தேதி துவஜாரோஹணத்தோடு துவங்கி 20ஆம் தேதி சக்கர ஸ்நானத்துடன் நிறைவடைகிறது. 16ஆம் தேதி கருட வாகனம் மிகவும் சிறப்பாக நடைபெறும்.**







# ஏகாதசி விரதம் புராண வரலாறுகளுடன்...

– திரு.துளசி கிருஷ்ணா,
சென்னை.

### மோகினி ஏகாதசி

வைகாசி மாத சுக்லபக்ஷ ஏகாதசியின் பெயர் மோகினி எனப்படும். மோகமாகிற மனமாசைப் போக்குவதனால் இந்த ஏகாதசி மோகினி எனப்படும். ஒரு சமயம் இராமன் வசிஷ்டரிடம் இவ்விரத மகிமையைக் கூறுமாறு கேட்டான். வசிஷ்டர் இராமனுக்கு கூறியதை நான் உனக்கு கூறுகிறேன் என்று கண்ணன் தர்ம புத்திரரிடம் சொல்லத் தொடங்கினான். இராமன் வசிஷ்டரிடம், “பகவத் விரதங்களில் சிறந்தது எது? பாவங்களை நாசம் செய்வது எது? எல்லா துக்கங்களையும் போக்குவது எது? நான் பல துக்கங்களை அனுபவித்தேன். சீதையை விட்டுப் பிரிந்தேன். இனியும் துக்கங்கள் என்னைச் சாராவண்ணம் அநுட்டிக்கத்தக்க விரதம் ஒன்று உளதேல் கூறுக என்று பணிவுடன் கேட்டான்.

வசிஷ்டர் : அப்பனே உன் பெயரைக் கூறினாலேயே பாபங்களும், இன்னல்களும் அகலுகின்றன. அப்படியிருக்க நீயே துயரம் போக்கிக் கொள்ள வழி ஒன்றை வினவுவது விந்தையிலும் விந்தையே. இருப்பினும் நீ கேட்டனை யாம் கூறுகின்றோம் என்று மோகினி ஏகாதசியின் பெருமையைக் கூறலுற்றார். இக்கதையைக் கேட்பதாலேயே மாபாபங்கள் நசிக்கும்.

சரஸ்வதி நதிக்கரையில் பத்ராவதி என்ற நகரம் ஒன்று உண்டு. அந்நகரை சந்திரகுலத்தோன்றலான த்ருதிமான் என்ற அரசன் அறநெறி வழுவாது ஆண்டு வந்தான். அவன் சத்ய ஸந்தன். நல்ல ரூபவான். அவனுடைய நகரம் தனம், தான்யம் முதலிய எல்லா செல்வச் சிறப்புகளும் பெற்று விளங்கிற்று. அவ்வூரில் தனபாலன் என்ற வைச்யன் வசித்து வந்தான். அவன் தர்மசீலன். மக்களுக்காகப் பல இடங்களில் கிணறு, குளங்கள் வெட்டியும், சத்திரங்கள் அமைத்தும், ஆங்கு அன்னம் பாலித்தும், பூங்கா முதலியவற்றைக் கட்டியும், எண்ணற்ற அறங்கள் செய்து பரிபாலித்து வந்தான். திருமாலிடம் தீர்க்க பக்தி உள்ளவனாய் இருந்தான். அவனுக்கு ஐந்து பிள்ளைகள் இருந்தனர். அவர்களில் த்ருஷ்டபுத்தி என்பவன் ஸர்வகனிட்டன். சூதாட்டம், பிறன்மனை விழைதல் முதலிய கொடிய பாவங்களைச் செய்து வந்தான். தெய்வ நிந்தை, அடியார்களுக்கு தொந்தரவு இவற்றைச் செய்து வந்தான். உண்ணத்தகாதவைகளை உண்ணுதல், கள் குடித்தல், விலை மாதர் சேர்க்கை போன்ற பாபங்களில் இவன் செய்யாத பாபம் ஒன்றுமில்லை. இவற்றை பொறுக்க முடியாத தந்தை இவனை வீட்டை விட்டு விரட்டி விட்டான். பிறகு திருஷ்டபுத்தி தன் வீட்டிலிருந்து அபகரித்த பணத்தைக்கொண்டும், தன்னிடமிருந்த அணிகலன்களை விற்றும், விலைமாதர்களின் தொடர்பினை வளர்த்து வந்தான். பணம் தீர்ந்தது. கணிகையரால் விரட்டப் பட்டான்.

கிழிந்த கந்தலாடைகளுக்கும் பஞ்சம், எங்கு செல்வேன்? எவ்விதமாக ஜீவிப்பேன் என வருந்தித் தவித்தான். திருட்டுத் தொழிலை மேற் கொண்டான். பல தடவை தண்டிக்கப்பட்டான். காவற்காரர்களால் இவன் விலங்கிடப்பட்டு அவர்க ளிடம் கசையடிபட்டு நாட்டிலிருந்தே விரட்டப்பட் டான். பயங்கரமான காட்டுக்குச்சென்று காய், கனிகளைப் புசித்தான்.

மான் முதலியவற்றை அடித்துத் தின்றான். ஒரு நாள் எவ்வித ஆகாரமும் கிடைக்கவில்லை.

மறுநாளும் அப்படியே சோர்ந்து திரிந்து கங்கைக்கரையை அடைந்தான். ஆங்கே நீராடிக் கொண்டிருந்த ஒரு மகரிஷியின் உத்தழிய ஜலம் இவன் மேல் பட்டது. அதனால் இவன் பரிசுத்தமானான். நல்ல புத்தி ஏற்பட்டது. அதனால் அவரை வணங்கினான். அவர் இவனது வரலாற்றினை அறிந்து கொண்டார். "குமாரா! நீ வைகாசி மாத சுக்ல பக்ஷ ஏகாதசி விரதம் இரு. உன் பாபங்கள் தீயினில் தூசாகும் எனக் கூறினார். த்ருஷ்டபுத்தி விரதமிருந்தான். மோகினி ஏகாதசியின் பயனால் அவனுக்கு எல்லா பாபங்களும் நீங்கின. ஆங்கே கருடன் தோன்றினான். அவனை விஷ்ணு லோகத்துக்கு அழைத்துச் சென்றான். இந்த புண்ணிய ஏகாதசியில் விரதமிருந்து பயன் பெறுவாயாக என்று கண்ணன் தர்மபுத்திரரிடம் கூறினான்.

**வரூதினி ஏகாதசி**

கண்ணன் தர்மபுத்திரரிடம் வைகாசி மாத கிருஷ்ண பக்ஷ ஏகாதசியின் பெருமையைக் கூறுகின்றான். ஏகாதசியின் பெயர் வரூதினி. இது இம்மை மறுமைப் பயன்களை அளிக்க வல்லது. பாபங்களைத் தகர்க்கவல்லது. பக்தி முக்தி தருவது. பலப் பிணியைப் போக்கவல்லது. இந்த ஏகாதசி விரதத்தை அநுட்டித்த மாந்தாதா ஸ்வர்க்கம் பெற்றான். துந்துமனி போன்ற அரசர்கள் உயர்ந்த லோகங்களை அடைந்து, சிறந்த இன்பங்களைப் பெற்றனர். துந்து உத்திரன் இந்த விரதத்தினால் கபால மோக்ஷம் பெற்றான். 10,000 வருஷம் இயற்றிய கடுந்தவப் பயன், குருக்ஷேத்திரத்திலும், சூரிய கிரஹண காலத்திலும் அதிகமான ஸ்வர்ண தானம் செய்த பலன்களை இந்த ஏகாதசியில் விரதம் இருப்பவர் பெறுவர்.

குதிரை தானத்தை விட யானை தானம் பெரிது. யானை தானத்தை விட பூமி தானம் பெரியது. அதைவிட ஸ்வர்ண தானம் பெரிது. அதைவிட உயர்ந்தது அன்னதானம். தேவ, மனுஷ் பித்ருக்களுக்கு திருப்தி ஏற்படுவது அன்னதானத்தினால்தான்.

அன்னதானத்திற்கு சமமான தானத்தைச் சொல்ல வேண்டுமானால் கன்யாதானத்தைத்தான் சொல்ல வேண்டும். முக்கடன்களைத் தீர்ப்பதற்குக் காரணமான புத்ர பாக்யம் இத்தானத்தாலேயே கிடைக்கிறது. இதைப் போல் கோதானம் சிறந்தது. இவை அனைத்தையும் விட பிரஹ்ம வித்யாப் பிரதானம் சிறந்தது. அந்தப் பலனை வரூதினி ஏகாதசி தருகின்றது.




## இராமா! ஸ்ரீராமா!!

**அனைத்து நற்குணங்களையும் தன்னுள் கொண்டு அனைவருக்கும் ஆராதனை தெய்வமாகத் திகழ்பவர் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி. ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி கிராமங்கள்தோறும் அர்ச்சா மூர்த்தியாக ஆலயங்களில் தரிசனமளிப்பது ஸ்ரீராமர் மீது பக்தர்களிடையே உள்ள அளவுகடந்த பக்திக்கு சான்றாகும்.**

**ஸ்ரீராமரின் ராஜ்ஜியம் அயோத்தியாக இருந்தாலும் இந்த பாரத தேசத்தின் பல பகுதிகள் ஸ்வாமியின் திருப்பாதத் தூளியால் அருளப்பட்ட தாகக் கூறப்படுகிறது. ஸ்ரீராமர் வனவாசம் செய்த போதும், சீதையைத் தேடி அலைந்த போதும், இராவணனை அழித்து அயோத்தி திரும்பிய போதும் பல இடங்கள் ஸ்வாமியின் திருவடி பட்டு புண்ணியத் தலங்களாயின. அவ்வகையில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு உட்பட்ட ஆலயங்களில் ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்ட ராமர் திருக்கோயில், திருப்பதி ஸ்ரீகோதண்டராமர் திருக்கோயில், வாயல்பாடு ஸ்ரீபட்டாபிராமர் திருக்கோயில், சந்திரகிரி ஸ்ரீகோதண்டராமர் திருக்கோயில் போன்ற திருக்கோயில்கள் ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கு அமைந்து உள்ளன. அத்திருக்கோயில்களுக்கு சென்று நாமும் ராமச்சந்திர மூர்த்தியின் திருவருளைப் பெறுவோம்.**

திருப்பதி பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 120 கி.மீ. தூரத்தில் கடப்பா மாவட்டம், ஒண்டிமிட்டாவில் ஸ்ரீகோதண்டராமர் திருக்கோயில் அமைந்துள்ளது. திரேதா யுகத்தில் தண்டகாரண்யமாக அழைக்கப்பட்ட இப்பகுதியில் மகரிஷிகள் தவம் புரிந்து வந்தனர். இவர்களின் தவம் மற்றும் யாகத்தை அரக்கர்கள் தடுக்க, மகரிஷிகள் தம்மைக் காத்திடும்படி ஸ்ரீராமரிடம் வேண்ட, ஸ்ரீராமர் இங்கு வந்து அரக்கர்களை அழித்தாராம். ரிஷிகளின் வேண்டுதலைக் கேட்டு ஸ்ரீராமர் கோதண்டம் தரித்து காட்சி அளித்ததால் ஸ்ரீகோதண்ட ராமராகி, ஸ்ரீசீதாராம லக்ஷ்மணர் பிரதிமைகளை ரிஷிகளின் வேண்டுகோளின்படி அளித்தாராம். காலப்போக்கில் ஜாம்பவான் ஒரு நாள் இப்பகுதிக்கு வர, அவரின் கனவில் ஸ்ரீராம பிரான் விக்ரஹ வடிவில் தாம் இங்கு உள்ளதாகக் கூற, ஒரே கல்லில் அமைந்த அச்சிலையைக் கண்டெடுத்து பிரதிஷ்டை செய்ததாக தலபுராணம் கூறுகின்றது.




*காம்ஸ்யமாம் ஸமஸூராமஸ்ச கணகாந் கோத்ரவாம்ஸ்ததா! ஸாகம் மத ப்ராந் நம் சபுநா போஜந மைதுநே! வைஷ்ணவோ வ்ரத்கர்த்தாச தஸம்யாம் தஸ வாஜயேத்!!*

1) வெண்கலப் பாத்திரத்தில் போஜனம், 2) மாம்ஸம், 3) வெண்கடலை, 4) கடலை, 5) வரகு, 6) காய்கறி, 7) மதகரமான வஸ்து இவற்றைச் சாப்பிடுவது, 8) பிறர் வீட்டில் உண்பது, 9)இரண்டாம் தரம் அன்னத்தைச் சாப்பிடுவது, 10) ஸ்திரிசம்போகம். இந்தப் பத்து அம்சங்களை தசமியில் விரதம் அனுஷ்டிப்பவன் தவிர்க்க வேண்டும்.

*‘‘த்யுதாம் கிரீடம் ச நித்ராம் ச தாம்பூலம் தந்ததாவநம்! பராப வாதம் பைஸூந்யம், ஸ்தேயம் ஹிம் ஸாம் ததாரதிம்; க்ரோதம் சைவாந்ருதம் வாக்யம் ஏகாதஸயாம் விவர்ஜயேத்:’’* சூதாட்டம் விளையாடுவது, உறங்குவது, வெற்றிலைப் போடுவது, பல் தேய்ப்பது, பிறரைப் பழித்தல், கோள் சொல்லுதல், திருடுவது, பிராணிகளுக்குத் துன்பத்தைக் கொடுப்பது, ஸம்போகம், கோபிப்பது, பொய் உரைத்தல் இவற்றை ஏகாதசியில் விட வேண்டும்.

மாம்ஸம், கள் குடித்தல், வபனம் செய்து கொள்வது, எண்ணெய் ஸ்நானம், தீயவருடன் ஸம்பாஷணை, தேகப்பயிற்சி, வெளி இடத்தில் தங்குவது முதலானவற்றைத் துவாதசியில் விட வேண்டும்.

இவ்வாறு இந்த வரூதினி ஏகாதசியில் விரதம் இருப்பவர் எல்லா பாபங்களையும் ஒழித்துவிட்டு, அழிவில்லாத இடத்தை அடைந்து அபரிமிதமான ஆனந்தத்தைப் பெறுவர். இதை அநுட்டிப்பவர்களுக்கு யமதர்சனமோ, யமலோகப் பிராப்தியோ இல்லை. இவ்வரலாற்றைப் படிப்பவர்களும், கேட்பவர்களும் சொல்லச் செய்தவர்களும் ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த பலனைப் பெறுவர்.

அடுத்த விரதம் அறிவோம்...



# ஏப்ரல் 2024
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

புத்திசாலித்தனமாக காரியங்கள் சாதித்துக் கொள்வீர்கள். தெய்வ தரிசனம் கிட்டும். பழைய பாக்கிகள் வசூலாகும். நேர்முகத்தேர்வில் வெற்றியும், வேலையும் கிடைக்கும். தொழிலில் நல்ல லாபம் கிட்டும். குழந்தைகள் கல்விக்காகவும், மனைவியின் ஆரோக்யத்திற் காகவும் செலவினங்கள் அதிகமானாலும் அதற்குரிய வருமானம் கிடைக்கும். நல்ல யோகமான மாதமிது.

**ரிஷபம்**

தொழில் துறையில் புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். குழந்தைகள் கல்விக்கும், குடும்பத்திற்கும் செலவினங்கள் அதிகமாகும். புதிய வாகனப் பிராப்தி, சுய தொழிலில் நல்ல லாபம் கிட்டும். லாபத்திற்கு ஏற்ற செலவி னங்களும் அதிகமாகும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப் பளு அதிகமானாலும் பதவி உயர்வு கிட்டும். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். முயற்சியால் முன்னேறும் மாதமிது.

**மிதுனம்**

தொழில் துறையில் லாபமும், புதிய முயற்சியில் வெற்றி யும் கிட்டும். பெற்றோர்கள் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். உறவினர்களால் தனலாபம் உண்டு. உங்கள் உடல் நோய்க்குத் தகுந்த மருத்துவம் கிட்டும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டு. பொதுவாக லாப நோக்கத்தோடு செயல்பட்டு முன்னேறும் மாதமிது.

**கடகம்**

குடும்பத்தினர் ஆரோக்யத்தில் எச்சரிக்கை தேவை. தொழில் துறையில் இடமாற்றம் கிட்டும். தாயின் ஆரோக்யம் நன்றாக இருந்தாலும் தந்தை ஆரோக் யத்தில் அக்கறை தேவை. கணவன்-மனைவி பிணக்குகள் ஏற்பட்டு பின் சரியாகும். இளைய சகோதரனுக்கு சிறுஅளவில் விபத்து ஏற்படும். மாணவர்களுக்கு முயற்சி திருவினை ஆக்கும். எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாதமிது.

**சிம்மம்**

தெய்வபலத்தினால் வெற்றி பெறும் மாதம். கடன் தொகை வசூலாகும். பணப்புழக்கம் தாராளமாகும். யாத்திரை செல்வீர்கள். பேச்சில் விவாதங்களைத் தவிர்க்கவும். கணவன்-மனைவி பிரச்சனை குறையும். பிரயாணத்தால் அலைச்சல் உண்டாகும். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். அலைச்சலினால் முன்னேறும் மாதமிது.

**கன்னி**

மனக் குழப்பத்தினால் தூக்கம் குறையும். குடும்பத்தி னாருடைய ஆரோக்யத்தில் அக்கறை தேவை. எக்காரியத்திலும் நிதானத்துடன் செல்வதே உத்தமம். அவசரப்பட்டு செய்யும் வேலைகள் தோல்வியை ஏற்படுத்தும். கணவன்-மனைவியிடையே சிறு பிரச்சனை ஏற்பட்டு பின் சரி ஆகும். மாணவர்கள் கடும் முயற்சியால் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். மொத்தத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாதமிது.

**துலாம்**

தெய்வ அருளினால் சகலமும் சித்திக்கும். விளை யாட்டுத் துறையில் நல்ல முன்னேற்றம் அடைவர். பழைய பாக்கிகள் வசூலாகும். பிரச்சனைக்கு பின் பூர்வீகச் சொத்துக்கள் கிட்டும். நல்ல மனிதர்களின் நட்பு கிட்டும். கணவன்-மனைவிக்குள் நல்லுறவுகள் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். சகல துறைகளிலும் முயற்சியினால் வெற்றி பெறும் மாதமிது.

**விருச்சிகம்**

பணம் பரிவர்த்தனையில் அக்கறை தேவை. உஷ் ணத்தால் வயிறு உபாதைகள் ஏற்படும். தாயின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. தொழில் துறையில் வெற்றி கிட்டும். குழந்தைகள் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் கடுமையாக உழைத்தால் நல்ல மதிப்பெண்கள் பெறலாம். சொத்துக்கள் குறித்து பேசவேண்டாம். எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதமிது.

**தனசு**

எதிர்பார்த்த சகல யோகங்களும் பெறும் மாதமிது. பூர்வீகச் சொத்துக்கள் விரைவில் கிட்டும். திருமணம் கைகூடும். சொத்துப் பிரச்சனைகள் தீரும். மனைவி குழந்தைகளின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். உடல் ஆரோக்யத்திற்கான நல்ல மருத்துவம் கிட்டும். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நல்ல யோகமான மாதமிது.

**மகரம்**

புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. தாயின் ஆரோக்யம் மேம்படும். நண்பர்கள், உறவினர்கள் உதவி செய்வர். தந்தை ஆரோக்யத்தில் அக்கறை தேவை. தொழில் துறையில் வளர்ச்சி உண்டு. நல்ல மனிதர் களின் நட்பு கிட்டி ஆரோக்ய குறைபாடுகள் நீங்கும். பணியா ளர்களால் நன்மையுண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். நல்ல முன்னேற்றம் தரும் மாதமிது.

**கும்பம்**

வேலைபளு அதிகரிக்கும். சரியான நேரத்தில் தூக்கம் வராது. சிறு பிரச்சனைகள் ஏற்பட்டு பின் சரியாகும். இரவு நேர பயணங்கள் தவிர்ப்பது நல்லது. முயற்சிகள் முதலில் தோல்வி தந்தாலும் பின் வெற்றி தரும். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. மாணவர்கள் நன்கு படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறலாம். முயற்சியால் வெற்றி பெறும் மாதமிது.

**மீனம்**

வேலைபளு, செலவினங்கள் அதிகரிக்கும். தொழில் துறையில் விருத்தி, தனலாபம் உண்டு. பெற்றோர் ஆரோக்யம் நன்றாக இருக்கும். மாண வர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். மனைவி, குழந்தைகளால் தனலாபம் உண்டு. புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். கணவன்-மனைவி பிணக்குகள் தீரும். வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் மாதமிது.

நீதிக்கதை

# அதர்மத்திற்கு வெற்றி கிடைக்காது



- திரு. பாலாஜி கணேஷ், சிதம்பரம்.

ஜானகியைத் தேடிக்கொண்டு வந்த அனுமன், அசோகவனத்தில் அவரைக் கண்டதும் துயருற்றார். இராவணனை எச்சரிக்கவும் செய்தார். கோபமுற்ற இராவணன் அனுமனின் வாலில் தீ மூட்ட ஆணையிட்டார். வாலில் பற்றிய நெருப்பைக் கொண்டு அசோகவனத்தைத் தவிர லங்காபுரி முழுவதையும் தீக்கிரையாக்கினார் அனுமன். இதில் இராவணனின் அரண்மனையும் பற்றி எரிந்தது. என்ன செய்வதென்று தெரியாத நிலையில் இராவணனும், அவனைச் சார்ந்தவர்களும் வேறொரு இடத்தில் தங்கினர். தேவதட்சன் லங்காபுரியை மீண்டும் புதுப்பித்தான்.

இதையடுத்து, இராமரின் பக்கம் இருக்கின்ற ஒரு வானரமே, இப்படி இலங்கையை எரித்து விட்டதே. அப்படியென்றால் இராமருடன் போர் தொடுத்தால் நான் தோல்வியைத் தழுவிடு வேனோ?" என்று நினைத்த இராவணன், தனக்கு வேண்டியவர்களுடன் இணைந்து இராமனின் பலத்தைத் தெரிந்துக் கொள்ள மந்திரிகளோடு ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினான். வயதில் மூத்தவரான மாலியவான், "இராவணா, ஸ்ரீராமன் நீ நினைப்பது போல் சாதாரணமானவன் அல்ல. மகாவிஷ்ணுவின் அவதாரம். லக்ஷ்மி தேவியின் அவதாரமான ஜானகியை விட்டுவிடு" என்று இராவணனுக்கு அறிவுரை கூறினார். ஆனால், இராவணன் அவரின் பேச்சை உதாசீனம் செய்தான்.

அடுத்ததாக விபீஷணன், "அண்ணா உனக்கு வேதவதியை நினைவு உள்ளதா? ஒரு பெண்ணால் தான் உன் உயிர் போகும்" என்று அவள் இறக்கும் தருவாயில் உனக்கு சாபமளித்தாள். அவள் கூறியதைப் போல் நீ ஜானகியைச் சிறைப் பிடித்து வைத்திருக்கிறாய். இது தவறு. நம் முன்னோர் களில் இரண்ய கசிபு என்னவவானார் என்பதையும் நாம் அறிவோம். ஆகவே தமையனே, நீ தவறு செய்வதை நான் அனுமதிக்க மாட்டேன் என்றான். அதையும் இராவணன் காதில் வாங்கவில்லை.

இராவணனின் தமையனான கும்பகர்ணன் "இராவணா, நீ ஆசைப்படுவது அடுத்தவரின் மனைவியை. இது தவறு. இருப்பினும் போர் என்று வந்தால் நம்மை வீழ்த்த எவராலும் முடியாது. அப்படி இருக்கையில் இந்த அற்ப மானிடரால் நம்மை என்ன செய்துவிட முடியும்? மானிடரை நாம் வெற்றி கொள்வது எளிது. ஆகையால் உனக்காக நான் போர் புரிகிறேன்" என்று கூறினான். கும்பகர்ணனின் வார்த்தை இராவணனுக்குத் தெம்பை அளித்தது.

அடுத்ததாக, இராவணனின் பிள்ளையான மேகநாதன் என்று அழைக்கப்படும் அதிபலசாலியாகப் பிறந்த இந்திரஜித் தேவர்களின் தலைவனான இந்திரனையே வென்றவர். மேகங்களில் தன்னை மறைத்துக் கொள்ளும் திறமை பெற்றவனாகத் திகழ்ந்ததால் மேகநாதன் எனவும் அழைக்கப் பட்டான். தந்தையைத் தெய்வமாக வணங்கியவன். ஆகையால், தனது தந்தை செய்வதை நியாயப்படுத்தினான்.

தந்தையே.... "நான் இந்திரனையே வென்றவன். என்னிடத்தில் பாசுபதம், பிரம்மாஸ்திரம், நாராயணாஸ்திரம் இருக்கிறதே. பிறகு எதற்கு கவலை? தைரியமாகப் போருக்குத் தயாராகுங்கள். அந்த மானிடர்கள் கூட்டத்தை நான் ஒரு கை பார்க்கிறேன்" என்று கூறவும், இராவணனுக்கு அதீத பலம் வந்தது. போர்புரியத் தயாரானான்.


ஒரு அவையில் அதர்மத்தை நியாயமாக்கி அதற்கு உதவி புரிவதற்கு பலசாலிகள் நால்வர் இருந்ததால், இராவணன் இராமருடன் போர் புரிய ஆயத்தமானான். இச்சபையில் இந்திரஜித்தும், கும்பகர்ணனும் இராவணனின் தவறை அவருக்கு உணர்த்தி போர் உதவிகள் செய்யாமல் இருந்திருந்தால் இராவணன் உயிர் நீத்திருக்க மாட்டான்.

நீதி: அதர்மத்துக்கு ஆதரவாக செயல்படும் ஒருவர், பலசாலிகளின் துணையைத் தன்னோடு கொண்டிந்தாலும் கூட அவரால் இறுதியில் வெற்றிபெற முடியாது.

பல்சுவைப் பகுதி




சித்திரப் பகுதி



படத்தைப் பாருங்கள் !

வண்ணம் தீட்டுங்கள் !!



1) கோடைக்கால பொருட்கள்
2) ஸ்ரீராமருக்கான நைவேத்தியம்
3) யுகாதி பச்சடிக்கான பொருட்கள்






*மேலே குறிப்பிட்ட பண்டிகை மற்றும் பருவ தினங்களுக்குப் பொருத்தமான சித்திரங்களுக்குரிய வட்டத்தில் அந்தந்த எண்களை எழுதுங்கள்*

## வார்த்தைகளைச் சரியாக எழுதி ஆத்திசூடியைப் படிப்போமா!

உண்ணேல் மண் பறித்து, பயிர் பருவத்தே செய், அலாதன செய்யேல் இயல்பு





இராமதூத அனுமனுக்கு சீதாராமரிடம் செல்வதற்கு எண்களை எழுதி வழியைக் காட்டிடுங்கள்



சரியான பாதையைக் கண்டுபிடி




முக்தேஸ்வரா மஹாதேவ் ஆலயம், மொஹாலி மைதானம், ஜாலியன் வாலாபாக் நினைவுத் தூண், பொற் கோயில் அமைந்துள்ள மாநிலம்......

வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-21

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ? எனப் பாசுரமிட்டவர் ..........................................
2. தந்தை சொல்லே மந்திரம் எனக் கூறி கானகம் சென்றவர் ..........................................
3. இராமனின் பாதத்தூளி பட்டவுடன் பெண்ணுரு அடைந்தவர் ..........................................
4. லக்ஷ்மணன் மனைவியின் பெயர் ..........................................
5. இராமனிடம் சரணடைந்த இராவணனின் தமையன் ..........................................
6. அனைத்து ஜீவராசிகளின் பாவக்கணக்கினை எழுதுபவர் ..........................................
7. தசரதன் நடத்திய யாகத்தின் பெயர் ..........................................
8. மன்னுபுகழ் கோசலை எனப் பாசுரமிட்டவர் ..........................................
9. கேரளாவில் பரதனுக்கு அமைந்துள்ள ஆலயம் ..........................................
10. திருமழிசையாழ்வாரின் சீடன் பெயர் ..........................................
11. தசரதனிடம் இருந்த அஸ்திரத்தின் பெயர் ..........................................
12. யதோக்தகாரி ஆலய விமானத்தின் பெயர் ..........................................
13. திருமலை நடைப்பாதையில் அன்னமய்யாவிற்கு தரிசனம் அளித்தவர் ..........................................
14. கேரளாவில் லக்ஷ்மணனுக்கு அமைந்துள்ள ஆலயம் ..........................................
15. கௌசல்யா தேவியின் ஆலயம் அமைந்துள்ள மாநிலம் ..........................................

## போட்டிக்கான நிபந்தனைகள்




- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றைச் சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.04.2024.

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

**விடைகளை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

**சக்கரத்தைச் சுற்றுங்கள்!**
**அதே வண்ணக் கட்டத்தில் எழுதுங்கள்!!**







## விடைகள்

1) தசரத ராமர், 2) கோசல ராமர், 3) கோதண்ட ராமர், 4) சீதா ராமர்,
5) சுந்தர ராமர், 6) ஜெயராமர், 7) பட்டாபி ராமர், 8) ரகு ராமர்.

இங்கே கீழே காணும் பொருட்களில் எந்த பொருள் அந்த கிண்ணத்தை சென்று அடையும். அந்த பொருள் செல்லும் வழியை வகுத்து காட்டுங்கள்



1) மாங்கொத்து

### விடாமுயற்சி வெற்றி தரும்!



எறும்பு சிறியதாக இருந்தாலும் தன் எடையை விட பெரிய அளவில் உள்ள உணவைக் கூடத் தூக்கிச் செல்லும்.

குழந்தைகளே! நீங்களும் என்னைப் போன்றே விடாமுயற்சியைக் கை கொண்டு வாழ்வில் பல வெற்றியைக் காணுங்கள்



# அனைவருக்கும் மோட்சம்

சித்திரக் கதை

கதை மூலம் : திரு. டி.ஸ்ரீநிவாசதீக்ஷிதுலு.
சித்திரம் : திரு. கே.துவரகநாத்.





உபதேசம் பெற்றுப் பிறகு ஸ்ரீராமானுஜர் நன்றாக ஆலோசித்தார். தம் சுயநலத்தை விட உலகின் பொதுநல செழிப்பே சிறந்தது என்று எண்ணினார். சீடர்களும் அவரைப் புகழ்ந்தனர்.
அனைவருக்கும் திருமந்திரார்த்தத்தை உபதேசிக்கிறேன். அனைவரும் மோட்சம் பெற வேண்டும்.
தேவரீருடைய நிர்ணயம் சிறந்தது ஸ்வாமி.
உடனே திருக்கோட்டியூர் ஆலய கோபுரத்தின் மேலேறி ஆசையுடையோர் அனைவரும் கேட்டு உய்யும்படி திருமந்திரார்த்தத்தை இராமானுஜர் உபதேசம் செய்தார்.
ஓம் நமோ நாராயணாய!
ஓம் நமோ நாராயணாய!
உடனே திருக்கோட்டியூர் நம்பிகள் ஸ்ரீராமானுஜரை அழைத்து கோபத்துடன் ...
யதிராஜா! எம் கட்டளையை மீறின நீர் நரகம் புக நேரிடும்.
எல்லோரும் முக்தியடைவதால் தான் ஒருவன் நரகத்திற்குச் செல்வதும் தம்முடைய பாக்கியமே!
ஸ்ரீராமானுஜர் கூற்றினை கேட்டப் பிறகு திருக்கோட்டியூர் நம்பிகள்...
யதிராஜா! நீர் அவதாரப் புருஷர்... உம் கருணை, தியாகம் பாராட்டுக்குரியது.
அனைத்தும் தேவரீரின் அருளே ஸ்வாமி!
திருக்கோட்டியூர் நம்பிகள் ஆனந்தத்துடன் இராமானுஜரை ஆரக் கட்டித் தழுவினார்.
யதிராஜா! நீரே எம்பெருமானார்.
இந்த ஜகத்குருவை உலகமே வணங்கியது.
அனைவருக்கும் மோட்சம் கிடைக்க வழிவகுத்த காரேய் கருணை இராமானுஜரே எம்பெருமானுக்கு அடுத்தபடி எம்பெருமானார் ஆனார்.
முற்றும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
(பெரிய எழுத்துக்களில்) _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2.தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐தமிழ் ☐கன்னடம் ☐ இந்தி ☐ஆங்கிலம் ☐சமஸ்க்ருதம்

3.வருட /ஆயுள் சந்தா :☐ ரூ.240/- ☐ரூ.2,400/-(12 வருடங்கள்)

4.சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5.செலுத்திய தொகை :

6.செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: சந்தாதாரர் கையொப்பம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஓ.,ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.

## திருமலையப்ப ஸ்வாமி வசந்தோத்ஸவம்
## 21-04-2024 முதல் 23-04-2024 வரை







## ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண
## வேங்கடேஸ்வர ஸ்வாமி புஷ்ப யாக மஹோத்ஸவம்
## 04-04-2024





SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-03-2024 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.

